**கவனிக்க.**- 2007.06.22 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியின் பகுதி IV (ஆ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1504 - 2007 ජූනි 29 වැනි සිකුරාදා - 2007.06.29**

1504 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 486 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 488 |

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, யூலை 06 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, யூன் 22 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரசகரும மொழித்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்கு விதிகள், தாபனக் கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும்:-

3 : 1 : 1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

3 : 1 : 2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடை நிறுத்தப்படும். அந்த இடை நிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 3:1:6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3 : 1 : 5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3 : 1 : 6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3 : 1 : 7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3 : 1 : 8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஒய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவு தொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்தி நிதியத்துக்குத் தனது உதவு தொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளன் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்த போதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவயாற்றிவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாது காப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப்பரீட்சார்த்திகளும்கீழ்வரும்விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும்.விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவான தாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குற்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்தி களுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தி யோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் .

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப் பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப் படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்ட தாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பரு மட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள் களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறு மொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்தி லேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலிய வற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த் தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப் பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன்அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப் படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிட மிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங் களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வை யாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றை யும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப் பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி வெற்றிடம் தொடர்பாக விண்ணப்பம் கோரும் அறிவித்தலை இரத்துச் செய்தல்

என்னால் விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவிகளில் வெற்றிடம் நிரப்புவதற்காக விண்ணப்பம் கோரும் அறிவித்தலை இரத்துச் செய்தல் கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு வெளிப்படுத்தப்படுகிறது.

விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர்களை ஆட்சேர்க்கும் புதிய திட்டத்தை (2006) நடைமுறைப்படுத்துவதற்காக விண்ணப்பம் கோருதலை இத்தால் இரத்துச் செய்கின்றேன். இது தொடர்பாக இதுவரை விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் அவர்களுக்கு பதிவுத்தபாலில் திருப்பி அனுப்பப்படும்.

வெற்றிடங்கள் நிரப்புவதற்காக மீண்டும் தேவையேற்படின் அது தொடர்பாக, வேண்டிய அறிவித்தல் வர்த்தமானி மூலம் பிரசித்தப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

எல். கே. ரத்னசிறி,
பதிவாளர் நாயகம்.

2007, மே 29.

அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலகம் | விண்ணப்பம் கோரப்பட்ட பிரிவும் பதவியும் | விண்ணப்பம் கோரப்பட்ட வர்த்தமானி பற்றிய விபரம் |
|---|---|---|---|
| 1. கொழும்பு | கஸ்பாவ | சல்பிட்ட கோறளை பிரிவின் கஸ்பாவ பிரதேசத்துக்கான மேலதிக விவாக (பொது) பதிவாளர் பதவி | 2006.02.24 (வெள்ளிக்கிழமை) 1434 ஆம் இலக்க வர்த்தமானி |
| 2. கொழும்பு | கஸ்பாவ | கஸ்பாவ பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் சல்பிட்ட கோறளை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | 2006.02.24 (வெள்ளிக்கிழமை) 1434 ஆம் இலக்க வர்த்தமானி |
| 3. கொழும்பு | கொழும்பு | கொழும்பு கொம்பனிவீதி பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | 2006.02.24 (வெள்ளிக்கிழமை) 1434 ஆம் இலக்க வர்த்தமானி |
| 4. கொழும்பு | கொழும்பு | மோதர பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | 2006.02.24 (வெள்ளிக்கிழமை) 1434 ஆம் இலக்க வர்த்தமானி |
| 5. கொழும்பு | கொழும்பு | புதுக்கடை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | 2006.02.24 (வெள்ளிக்கிழமை) 1434 ஆம் இலக்க வர்த்தமானி |
| 6. கொழும்பு | கொழும்பு | கொழும்பு மோதர (தெற்கு) பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | 2006.02.24 (வெள்ளிக்கிழமை) 1434 ஆம் இலக்க வர்த்தமானி |
| 7. கொழும்பு | திம்பிரிகஸ்யாய | போரல்லை பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | 2006.02.24 (வெள்ளிக்கிழமை) 1434 ஆம் இலக்க வர்த்தமானி |

| மாவட்டம் | பிரதேச செயலகம் | விண்ணப்பம் கோரப்பட்ட பிரிவும் பதவியும் | விண்ணப்பம் கோரப்பட்ட வர்த்தமானி பற்றிய விபரம் |
|---|---|---|---|
| 8. கொழும்பு | திம்பிரிகஸ்யாய | கொள்ளுப்பிட்டி பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | 2006.02.24 (வெள்ளிக்கிழமை) 1434 ஆம் இலக்க வர்த்தமானி |
| 9. கொழும்பு | திம்பிரிகஸ்யாய | கொழும்பு வைத்தியசாலை பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | 2006.02.24 (வெள்ளிக்கிழமை) 1434 ஆம் இலக்க வர்த்தமானி |
| 10. கொழும்பு | ஸ்ரீ ஜயவர்த்தனபுரம் கோட்டே | கொழும்பு பிரிவின் தென்பிரதேச விவாக (பொது) பதிவாளர் பதவி | 2006.02.24 (வெள்ளிக்கிழமை) 1434 ஆம் இலக்க வர்த்தமானி |
| 11. கொழும்பு | ஹோமாகம | அதுறுகிரிய பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் ஹேவாகம் கோறளை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | 2006.02.24 (வெள்ளிக்கிழமை) 1434 ஆம் இலக்க வர்த்தமானி |
| 12. கொழும்பு | மகரகம | மகரகம பிரிவின் களல்கொட, பன்னிபிடிய பிரதேச விவாக (பொது) பதிவாளர் பதவி | 2006.02.24 (வெள்ளிக்கிழமை) 1434 ஆம் இலக்க வர்த்தமானி |
| 13. கொழும்பு | கொலன்னாவ | கொலன்னாவ நகர பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | 2006.02.24 (வெள்ளிக்கிழமை) 1434 ஆம் இலக்க வர்த்தமானி |
| 14. கொழும்பு | பாதுக்க | வக பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் ஹேவாகம் கோறளை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | 2006.02.24 (வெள்ளிக்கிழமை) 1434 ஆம் இலக்க வர்த்தமானி |
| 15. கொழும்பு | ஹோமாகம | கோட்டாவ பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் ஹேவாகம் கோறளை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | 2003.10.03 (வெள்ளிக்கிழமை) 1309 ஆம் இலக்க வர்த்தமானி |
| 16. கொழும்பு | மொரட்டுவ | மொரட்டுவ நகர பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | 2003.10.03 (வெள்ளிக்கிழமை) 1309 ஆம் இலக்க வர்த்தமானி |
| 17. கொழும்பு | கொழும்பு | கொழும்பு பிரிவின் மருதானை முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | 2006.02.24 (வெள்ளிக்கிழமை) 1434 ஆம் இலக்க வர்த்தமானி |

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கல்வி அமைச்சு**

*ஆசிரியர் கல்வி தொடர்பான சேவை முன் தொழிற்பயிற்சி நெறி ஒன்றைப் பயிலுவதற்குத் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கான அனுமதி - 2008*

*தேசிய கல்வியியற் கல்லூரி ஒன்றில் ஆசிரியர் கல்வியில் மூன்றாண்டு கால சேவை முன்தொழிற்பயிற்சி ஒன்றைப் பயிலுவதற்குத் தேவையான கல்வித் தகைமைகளையும் தகுதிகளையுமுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*2.* ***தகவுத் திறன்.***- *சகல விண்ணப்பதாரிகளும்-*

*2.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.*

*2.2 சிறந்த ஒழுக்கமும் உறுதியான உடல், உள நலமும் உடையவராக இருத்தல் வேண்டும்.*

*2.3* ***வயது*** *:*

*2.3.1 2008.01.01 இல் 25 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.*

*2.3.2 கத்தோலிக்க அல்லது கிறிஸ்தவ நெறிகளுக்கு விண்ணப்பிக்கும் மதகுருமாருக்கான வயதெல்லை 01.01.2008 இல் 30 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.*

*2.3.3. பௌத்தமத நெறிக்கு விண்ணப்பிக்கும் புத்தசமய மதகுருமார்கள் 2008.01.01. இல் 27 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.*

*2.4 விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும்.*

*3.* ***அடிப்படைக் கல்வித் தகைமைகள் :***

*3.1 2006 ஆம் ஆண்டு நடந்த க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரிக்கான அனுமதிக்கு க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (தொழில்நுட்பக் கல்வி பயிற்சிநெறிக்கு விண்ணப்பிப்போர் 4.14 பகுதியில் கவனிக்க வேண்டியன என்ற அம்சத்தையும் கத்தோலிக்க/கிறிஸ்தவ பயிற்சிநெறியின் மதகுருமார் 4.10 பகுதியில் கவனிக்க வேண்டியன எனும் அம்சத்தையும் வாசிக்கவும்.)*

*3.2 க. பொ. த. (சா. த.) பரீட்சையில்/ஆரம்பப் பிரிவெனா இறுதிப் பரீட்சையில் கணிதம், சிங்களம்/தமிழ் மொழி உள்ளிட்ட 6 பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் (முதல் தடவையில் 5 பாடங்களில்) 3 திறமைச்சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)*

*3.3 அவ்வப்பாடநெறிகளுக்குரிய க.பொ.த. (சா.த.) பரீட்சையில் விசேட தகைமைகள் மேலே 3.2 இற்கு அமைய இரு அமர்விலும் பூரணப்படுத்தாதுவிட்டால் கட்டாயமாக மூன்றாவது அமர்விலே பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். சகல கல்வித் தகைமைகளும் விண்ணப்ப முடிவுத் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் நிறைவு செய்திருத்தல் வேண்டும்.*

*3.4 ஆங்கில மொழிப் பாடநெறி மற்றும் ஆங்கில மொழிமூலப் பாடநெறிக்கான ஆங்கில மொழித் தேர்ச்சி-*

*3.4.1 ஆங்கில மொழிப் பாடநெறி தவிர்ந்த ஆங்கில மொழி மூலம் நடைபெறும் ஏனைய பாடநெறிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் (C) சித்தி/ஆங்கில இலக்கியத்தில் (S) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். எவ்வாறெனினும் ஆங்கில மொழிப் பாடத்தில் (A) சித்தி/(B) சித்தி, ஆங்கில இலக்கியத்தில் (A) சித்தியும்/(B) சித்தியும் (C) சித்தியும் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.*

*3.4.2 ஆங்கில மொழிப் பாடநெறிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் (B) சித்தி/ஆங்கில இலக்கியத்தில் (C) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.*

*3.4.3 நூலகக் கல்வியும் தொடர்பாடலும், சுகாதாரமும் உடற்கல்வியும், தகவல் தொடர்பாடல் ஆகிய பாடநெறிகளை ஆங்கில மொழிமூலம் கற்பதாயின், சிங்கள, தமிழ்மொழிமூலப் பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களை அடிப்படையாகக்*

கொண்டு சிங்கள, தமிழ்மொழி மூலம் க.பொ.த. (உயர்தரம்) பயின்ற மாணவர்களுக்கிடையே தெரிவுசெய்யப்படும் மாணவர் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

3.5 சகல தகைமைகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தில் அல்லது அதற்கு முன்பு பூர்த்திசெய்யப்பட்டிருக்க வேண்டும்.

4. **கல்வித் தகைமைகளும் வேறு விசேட தகைமைகளும்.**- தேசிய கல்வியியல் கல்லூரிகளில் உள்ள ஒவ்வொரு பாடநெறிக்கும் பொருத்தமான கல்வித் தகைமைகளும் ஏனை விசேட தகைமைகளும் பின்வருமாறு:-

4.1 ***பாடநெறி இல. 01*** - ஆரம்பக் கல்வி

4.1.1 2006 ஆம் ஆண்டு நடந்த க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம் அல்லது தமிழ் உட்பட மூன்று பாடங்களில் (ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரிக்கு இரண்டு பாடங்களில்) ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ; அத்துடன்

4.1.2 க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம்/தமிழ்மொழியில் திறமைச்சித்தியும் கணிதம் உள்ளிட்ட ஆறு பாடங்களில் குறைந்தது 3 திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

4.2 ***பாடநெறி இல. 02***- விஞ்ஞானம் (சிங்களம்)

***02***- விஞ்ஞானம் (தமிழ்)

***02***- விஞ்ஞானம் (ஆங்கிலம்)

4.2.1 2006 ஆம் ஆண்டில் நடந்த க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீகவியல், இரசாயனவியல், விலங்கியல், தாவரவியல், உயிரியல் ஆகியவற்றில் மூன்று பாடங்களில் (ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரிக்கு இரண்டு பாடங்களில்) ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ; அத்துடன்

4.2.2 க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் கணிதம் 32 அல்லது கணிதம் 42 பாடத்தில் திறமைச்சித்தியும் சிங்களம் அல்லது தமிழ்மொழியில் சித்தியும் உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

4.3 ***பாடநெறி இல. 03*** - கணிதம் (சிங்களம்)

***03*** - கணிதம் (தமிழ்)

***03*** - கணிதம் (ஆங்கிலம்)

4.3.1 2006 ஆம் ஆண்டில் நடந்த க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீகவியல், இரசாயனவியல், கணிதம், இணைந்த கணிதம், உயர் கணிதம் ஆகியவற்றில் மூன்று பாடங்களில் (ஸ்ரீபாத தேசியக் கல்வியியல் கல்லூரிக்கு கணிதப் பாடங்களில் தூய கணிதம், பிரயோக கணிதம், இணைந்த கணிதம், உயர் கணிதம் பௌதீகவியல், இரசாயனவியல் ஆகியவற்றில் இரண்டு பாடங்களில் ஒரே தடவையில்) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ; அத்துடன்

4.3.2 க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழியில் திறமைச் சித்தியுடன், 34 விஞ்ஞானப் பாடத்தில் திறமைச் சித்தியுடன் க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.)

4.4 ***பாடநெறி இல.*** ***04*** - உடற்கல்வி (சிங்களம்)

***04*** - உடற்கல்வி (தமிழ்)

***04*** - உடற்கல்வி (ஆங்கிலம்)

4.4.1 2006 ஆம் ஆண்டில் நடந்த க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஏதாவது பாடங்கள் மூன்றில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ; அத்துடன்

4.4.2 க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் கணிதம், சிங்களம்/தமிழ்மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும் ; அத்துடன்

4.4.3 ஏற்றுக்கொள்ளப்பட்ட கூட்டு மைதான விளையாட்டுக்களுடன் ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டு தொடர்பான தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேறுபட்ட விளையாட்டுக்கள் அல்லது நிகழ்ச்சிகள் அல்லது செயற்பாடுகள் மூன்றுக்கு ஆகக் கூடுதலாக 75 புள்ளிகள் பின்வரும் ஒழுங்குமுறைக்கு அமைய வழங்கப்படும்.

(2009 ஆம் வருடத்திற்காக தேசியக் கல்விக் கல்லூரிகளில் உடற்கல்வி பாடநெறிக்காக அனுமதிக்கையில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்தில் சித்தியடைந்திருத்தல் கட்டாயமாகும்.)

**முன்னுரிமை அடிப்படையில் விளையாட்டுக்கள் அல்லது நிகழ்ச்சிகள் அல்லது செயற்பாடுகள்**

| தொடர் இல. | மட்டம் | தனி | குழு | இடம் | புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| 1. | சர்வதேச மட்டம் | 1 | - | 1 | 25 |
| 2. | சர்வதேச மட்டம் | 1 | - | 2 | 24 |
| 3. | சர்வதேச மட்டம் | 1 | - | 3 | 23 |
| 4. | சர்வதேச மட்டம் | - | 1 | 1 | 22 |
| 5. | சர்வதேச மட்டம் | - | 1 | 2 | 21 |
| 6. | சர்வதேச மட்டம் | - | 1 | 3 | 20 |
| 7. | சர்வதேச பங்கேற்றல் | 1 | 1 | - | 19 |
| 8. | தேசிய மட்டம் | 1 | - | 1 | 18 |
| 9. | தேசிய மட்டம் | 1 | - | 2 | 17 |
| 10. | தேசிய மட்டம் | 1 | - | 3 | 16 |
| 11. | தேசிய மட்டம் | - | 1 | 1 | 15 |
| 12. | தேசிய மட்டம் | - | 1 | 2 | 14 |
| 13. | தேசிய மட்டம் | - | 1 | 3 | 13 |
| 14. | மாகாண மட்டம் | 1 | - | 1 | 12 |
| 15. | மாகாண மட்டம் | 1 | - | 2 | 11 |
| 16. | மாகாண மட்டம் | 1 | - | 3 | 10 |
| 17. | மாகாண மட்டம் | - | 1 | 1 | 09 |
| 18. | மாகாண மட்டம் | - | 1 | 2 | 08 |
| 19. | மாகாண மட்டம் | - | 1 | 3 | 07 |
| 20. | ரெஜிமன்ட் சாஜன்ட் மேஜர்/ அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் | - | - | 06 | - |
| 21. | ஜனாதிபதி சாரணியமும் பெண் சாரணியமும் | - | - | - | 06 |
| 22. | சாஜன்ட் மேஜர் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தி யோகத்தர் 2 | - | - | 05 | - |
| 23. | மாவட்ட/வலய மட்டம்/ பிரதேச செயலக மட்டம் | 1 | - | 1 | 06 |
| 24. | மாவட்ட/வலய மட்டம்/ பிரதேச செயலக மட்டம் | 1 | - | 2 | 05 |
| 25. | மாவட்ட/வலய மட்டம்/ பிரதேச செயலக மட்டம் | 1 | 1 | 3 | 04 |
| 26. | மாவட்ட/வலய மட்டம்/ பிரதேச செயலக மட்டம் | - | 1 | 1 | 03 |
| 27. | மாவட்ட/வலய மட்டம்/ பிரதேச செயலக மட்டம் | - | 1 | 2 | 02 |
| 28. | மாவட்ட/வலய மட்டம்/ பிரதேச செயலக மட்டம் | - | | 3 | 01 |

4.4.4. க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்திற்கு தோற்றி சித்தி பெற்றிருப்பின் பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்:-

A சித்தி - 4

B சித்தி - 3

C சித்தி - 2

S சித்தி - 1

**கவனிக்க வேண்டியது**.- (i) அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டி (சர்வதேச மட்டம்) - கல்வி அமைச்சு/விளையாட்டு அமைச்சு அவற்றில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கூடாக (சதுரங்கம், கரம், டாம் தவிர) இலங்கை தேசிய குழுவினை அல்லது பாடசாலை விளையாட்டுக் குழுவினை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சர்வதேச மட்டத்திலான போட்டிகளில் பங்குபற்றியிருத்தல். (பாடசாலை விளையாட்டுக் குழுவில் தனிப்பட்ட ரீதியில் பங்குபற்றிய சர்வதேசப் போட்டிகள் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.)

(ii) அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டி கல்வி அமைச்சு/விளையாட்டு அமைச்சு தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட தேசிய மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகள்.

மாகாண கல்வி அமைச்சு/மாகாண விளையாட்டு அமைச்சு/தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் மாகாண மட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட விளையாட்டுப் போட்டிகள்.

மாகாண விளையாட்டு அமைச்சு/தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் மாவட்ட மட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட மாவட்ட மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகள்.

மாகாண கல்வியமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட கல்வி வலய மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகள்.

(iii) விளையாட்டு அமைச்சில் அல்லது கல்வி அமைச்சில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களினூடாக ஒழுங்கு செய்யப்பட்ட "A" தரத்திலான போட்டிகளில் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் தரங்களைப் பெற்றவர்களுக்கு மாத்திரம் அவ்வொழுங்கில் முன்னுரிமை வழங்கப்படும்.

(iv) விண்ணப்ப இறுதித் திகதிக்கு முன்னருள்ள ஐந்து வருடங்களில் பெறப்பட்ட விளையாட்டுத் தேர்ச்சிகள் செல்லுபடியாகும்.

(v) விளையாட்டுச் சான்றிதழ்கள் மூன்றுக்கு புள்ளி வழங்கும்போது ஒரே நிகழ்ச்சியில் ஒரே வயது மட்டத்தில் ஒரே வருடத்தில் பெறப்பட்ட சான்றிதழ்களில் அதிகூடிய ஒன்றுக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.

(vi) விளையாட்டு சான்றிதழ்கள் மூன்றிற்கு புள்ளி வழங்குவதற்கு மேலதிகமாக 4.4.4 இன் கீழ் தகைமைகளைப் பெற்றிருப்பின் அதற்கான புள்ளிகளும் வழங்கப்படும்.

4.5 ***பாடநெறி இல. 05*** - மனைப் பொருளியலும் உணவுத் தொழில்நுட்பமும் (சிங்களம்)
மனைப் பொருளியலும் உணவுத் தொழில்நுட்பமும் (தமிழ்)

4.5.1 2006 ஆம் ஆண்டில் நடந்த க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் மனைப்பொருளியல் உட்பட மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் வேண்டும் ; அத்துடன்

4.5.2 விஞ்ஞானப் பாடத்தில் திறமைச் சித்தியுடன் க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் கணிதம், சிங்களம்/தமிழ்மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.)

4.6 ***பாடநெறி இல. 06*** - ஆங்கிலம்

4.6.1 2006 ஆம் ஆண்டில் நடந்த க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆங்கிலம் (பொது ஆங்கிலம் அல்ல) உட்பட மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் வேண்டும் ; அத்துடன்

க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் ஆங்கில மொழியில் (B) சித்தி/ஆங்கில இலக்கியத்தில் (C) சித்தியுடன் கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல்/லண்டன் க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.6.2 2006 ஆம் ஆண்டில் நடந்த க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதாவது மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் அத்துடன் 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற லண்டன் க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஆங்கிலம் உட்பட மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில்/லண்டன் க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் ஆங்கிலத்தில் (B) சித்தி/ஆங்கில இலக்கியத்தில் (S) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் தமிழ்/சிங்கள மொழி, கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது

4.6.3 2006 ஆம் ஆண்டில் நடந்த க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதாவது மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் அத்துடன் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் (B) சித்தி/ஆங்கில இலக்கியத்தில் (C) சித்தியுடன் தமிழ் அல்லது சிங்கள மொழி, கணிதம் உட்பட ஆறு பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

**கவனிக்க வேண்டியது**.- (i) தெரிவு செய்வதில் ஆங்கிலப் பயிற்சி நெறியில் மேலே 4.6.1, 4.6.2 பிரிவில் தகுதி பெறும் விண்ணப்பதாரிகளுக்கு அந்த ஒழுங்கின் பிரகாரம் முன்னுரிமை வழங்கப்படும். இவர்கள் தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியதில்லை. நேர்முகப் பரீட்சையில் தகைமைகள் நிரூபிக்கப்படல் வேண்டும்.

(ii) 4.6.3. இன் கீழ் தகுதி பெறுவோர் தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

4.7 ***பாடநெறி இல. 07 - பௌத்த சமயம் :***

பௌத்த சமயப் பாடநெறிக்கு பௌத்த மதகுருமாரும் சாதாரண விண்ணப்பதாரர்களும் விண்ணப்பிக்கலாம். சகல தேவைகளும் 2006 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். குறைபாடுள்ள விண்ணப்பதாரிகளின் கல்வித் தகைமைகள் யாவும் 2006 அல்லது அதற்குமுன் பூரணப்படுத்தியிருக்க வேண்டும்.

4.7.1 2006 ஆம் ஆண்டு நடந்த க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் பௌத்த சமயம், பௌத்த நாகரீகம், பாளி, சிங்களம் ஆகியவற்றில் இரு பாடங்கள் உட்பட மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

4.7.2 பிராச்சின ஆரம்பப் பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். (பௌத்த மதகுருமாருக்கு மாத்திரம்)

4.7.3 பௌத்த தர்மாச்சாரியப் பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

4.7.4 சமயப் பாடசாலை இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.7.5 க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் கணிதம், சிங்களம், புத்த சமயம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்/சிங்கள மொழி, கணிதம், திரிபீடகம் உட்பட ஆறு பாடங்களில் அடிப்படை பிரிவெனா இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

(**கவனிக்க வேண்டியது**.- தெரிவு ஒழுங்குமுறை :-

(அ) 4.7.1, 4.7.2, 4.7.3, 4.7.4, 4.7.5 உட்பட சகல சான்றிதழ்களும் பெற்ற விண்ணப்பதாரிகள்.

(ஆ) 4.7.1, 4.7.2, 4.7.5 சான்றிதழ்களையுடைய விண்ணப்பதாரிகள்.

(இ) 4.7.1, 4.7.3, 4.7.5 சான்றிதழ்களையுடைய விண்ணப்பதாரிகள்.

(ஈ) 4.7.1, 4.7.4, 4.7.5 சான்றிதழ்களையுடைய விண்ணப்பதாரிகள்.

(உ) 4.7.1 மற்றும் 4.7.5 சான்றிதழ்கள் உள்ள விண்ணப்பதாரிகள்)

4.8 ***பாடநெறி இல. 08 - இந்து சமயம் :***

4.8.1 2006 ஆம் ஆண்டில் நடந்த க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் இந்து சமயம், இந்து நாகரிகம், சமஸ்கிருதம் ஆகிய பாடங்களில் எவையேனும் ஒரு பாடம் உட்பட எல்லாமுமாக மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

4.8.2 சைவ சித்தாந்த பண்டிதர் பத்திரம் பெற்றிருத்தல்.

4.8.3 சைவப் புலவர் பத்திரம் பெற்றிருத்தல்.

4.8.4 இளம் சைவப் புலவர் பத்திரம் பெற்றிருத்தல்.

4.8.5 க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் தமிழ்மொழி, கணிதத்துடன் இந்து சமயம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கவனிக்க வேண்டியது**.- தெரிவு ஒழுங்குமுறை -

(அ) 4.8.1, 4.8.5 ஆகிய இரண்டு உட்பட சகல சான்றிதழ்களும் பெற்ற விண்ணப்பதாரிகள்.

(ஆ) 4.8.1, 4.8.4, 4.8.5 ஆகிய மூன்று சான்றிதழ்களுடன் ஏனைய இரண்டு சான்றிதழ்களுடைய விண்ணப்பதாரிகள்.

(இ) 4.8.1, 4.8.5 ஆகிய இரண்டுடன் ஏதாவதொரு சான்றிதழ் பெற்ற (விண்ணப்பதாரிகளும்) 4.8.1 சான்றிதழ் பெற்றவர்களும்.

(ஈ) 4.8.1, 4.8.5 சான்றிதழ்கள் பெற்ற விண்ணப்பதாரிகள்.

மேற்கூறிய தகைமைகளை 2006 இல் அல்லது அதற்கு முன்னர் பெற்றிருத்தல் வேண்டும்.

4.9 ***பாடநெறி இல. 09* - இஸ்லாம்**

4.9.1 2006 ஆம் ஆண்டில் நடந்த க.பொ.த (உயர் தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் இஸ்லாம், இஸ்லாமிய நாகரிகம், அரபு ஆகிய பாடங்களில் ஒரு பாடம் உட்பட மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

4.9.2 அல் ஆலிம் சான்றிதழ் (பகுதி I, II) சித்தியடைந்தவர்கள்.

4.9.3 மௌலவி சான்றிதழ் பெற்றிருத்தல் மற்றும் அல் ஆலிம் பரீட்சையில் I ஆம் பகுதி சித்தியடைந்திருத்தல்.

4.9.4. மௌலவி சான்றிதழ் பெற்றிருத்தல்.

4.9.5 க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் தமிழ்மொழி, கணிதத்துடன் இஸ்லாம் சமயம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கவனிக்க வேண்டியது**.- தெரிவு ஒழுங்குமுறை -

(அ) 4.9.1, 4.9.5 உட்பட மேற்குறிப்பிடப்பட்ட சகல சான்றிதழ்களும் பெற்ற விண்ணப்பதாரிகள்.

(ஆ) 4.9.1, 4.9.3, 4.9.4, 4.9.5 ஆகிய சான்றிதழ்கள்.

(இ) 4.9.1, 4.9.4, 4.9.5 ஆகிய சான்றிதழ்கள்.

(ஈ) 4.9.1, 4.9.5 ஆகிய சான்றிதழ்கள் உள்ள விண்ணப்பதாரிகள்.

மேற்கூறிய தகைமைகளை 2006 இல் அல்லது அதற்கு முன்னர் பெற்றிருத்தல் வேண்டும்.

4.10 ***பாடநெறி இல. 10* - றோமன் கத்தோலிக்கம்/கிறிஸ்தவம்**

4.10.1 2006 ஆம் ஆண்டில் நடந்த க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தலோடு சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட 6 பாடங்களில் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

அத்துடன்

க.பொ.த. (உயர்தரப்) பரீட்சையில் கிறிஸ்தவ சமயப் பாடத்தில் சித்தி அல்லது க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் கத்தோலிக்கம்/கிறிஸ்தவ சமய பாடத்தில் திறமைச்சித்தியுடன் விண்ணப்பதாரிகளில் கத்தோலிக்கர், ஆயரிடமிருந்தும் கிறிஸ்தவர்கள் தேசிய கிறிஸ்தவ சபையிடமிருந்தும் கத்தோலிக்கம்/ கிறிஸ்தவ சமய பாட ஆசிரியராவதற்குரிய தகைமையுள்ளவர் என்ற சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

4.10.2 கத்தோலிக்க சமயத்துக்கு விண்ணப்பிப்பவர்களின் தெரிவுகள் பின்வரும் தகைமைகளுக்கமைய முன்னுரிமை ஒழுங்கின்படி நடைபெறும் :-

4.10.2.1 தேசிய கத்தோலிக்க மத்திய நிலையத்தினால் வழங்கப்படும் திருமறை தொடர்பான 4 வருட பாடநெறிச் சான்றிதழ் ; அல்லது

4.10.2.2 தேசிய கத்தோலிக்க மத்திய நிலையத்தினால் நடாத்தப்படும் கிறிஸ்தவ மெய்யியல் சான்றிதழ் ;

4.10.2.3 திருமறை நிலையத்தினால் நடாத்தப்படும் 3 வருட மறைக்கல்வி பாடநெறிச் சான்றிதழ் ;

அல்லது

4.10.2.4 துறவி ஒருவராக வருவதற்காக மறைக்கல்வி மற்றும் பயிற்சிப் பாடநெறியை (NOVITIATE) நிறைவுசெய்துள்ளதாக துறவற சபைத் தலைவர் அல்லது அதற்குப் பொறுப்பான ஆயரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ;

அல்லது

4.10.2.5 தேசிய மறைக்கல்வி மத்திய நிலையத்தினால் நடாத்தப்படும் கத்தோலிக்க திருமறை ஆசிரியர் (மறை ஆசிரியர்) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் ;

அதாவது-

கௌரவ மறை ஆசிரியர் (மறை ஆசிரியர்-3) அல்லது

சிறப்பு மறை ஆசிரியர் (மறை ஆசிரியர்-2) அல்லது

பொது மறை ஆசிரியர் (மறை ஆசிரியர்-1) அல்லது

4.10.2.6 க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் கிறிஸ்தவ சமயப் பாடத்தில் சித்தியடைந்திருத்தல்

4.10.3 கிறிஸ்தவ சமய விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யும் ஒழுங்குமுறை கீழ்குறிப்பிடப்பட்ட தகைமைகளுக்கு இணங்க நடைபெறும் :-

4.10.3.1 பிலிமத்தலாவையில் உள்ள இலங்கை கிறிஸ்தவ இறையியல் கலாசாலையில் இறையியல் டிப்ளோமா தராதரம் பெற்றிருத்தல்.

4.10.3.2 தேசிய கிறிஸ்தவ சபையினால் நடாத்தப்படும் சமய அறிவு தொடர்பான மறை ஆசிரியர் தேசிய சான்றிதழ் பெற்றிருத்தல்.

**கவனிக்க வேண்டியது**.- (i) சேர்த்துக்கொள்ளப்படும் மொத்த எண்ணிக்கையில் 90% தெரிவின்போது 4.10.1 இன்கீழ் தகைமையுள்ள விண்ணப்பதாரிகளுள் 4.10.2 இன்கீழ் காட்டப்பட்டுள்ள முன்னுரிமைப்படி தெரிவு இடம்பெறும். 90% கத்தோலிக்க விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அவ்வெற்றிடங்களுக்கு கிறிஸ்தவ மத விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(ii) சேர்த்துக்கொள்ளப்படும் மொத்த எண்ணிக்கையில் 4.10.1 இன்இன்கீழ் தகைமையுள்ள கிறிஸ்தவ சமய விண்ணப்பதாரிகளுள் 4.10.3 இன்கீழ் தரப்பட்டுள்ள ஒழுங்கு முறைப்படி தெரிவு இடம்பெறும். 10 வீதமான கிறிஸ்தவ விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அவ்வெற்றிடங்கள் கத்தோலிக்க சமயத்தவர்களுக்கு வழங்கப்படும்.

(iii) சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளின் மொத்த எண்ணிக்கையில் 40 வீதம் கத்தோலிக்க, கிறிஸ்தவ மதகுருமாரில் இருந்து தெரிவு செய்யப்படுவர். 40 வீதமான மதகுரு விண்ணப்பதாரிகள் இல்லையாயின் அவ்வெற்றிடம் ஏனைய விண்ணப்பதாரிகளால் நிரப்பப்படும்.

(iv) மதகுருமார் விண்ணப்பதாரிகளில் 2006 ஆம் வருடம் உயர்தரம் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் போதியளவு இல்லாதவிடத்து 2005, 2004, 2003, 2002, 2001 ஆம் வருடங்களில் உயர்தரம் சித்தியடைந்த மதகுரு விண்ணப்பதாரிகளிலிருந்து 2006 வருடத்திற்கு கிட்டிய வருடத்தை கவனத்தில் கொள்ளப்படும். இதில் மதகுருமார்களிலிருந்து தெரிவு இடம்பெறும்.

(iv) விண்ணப்பப்படிவத்தில் பாடநெறியின் பெயர் குறிப்பிடப்படும் இடத்தில் கிறிஸ்தவம் அல்லது கத்தோலிக்கம் எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.)

4.11 ***பாடநெறி இல. 11* -நூலக விஞ்ஞானமும் தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பமும் :**

4.11.1 2006 ஆம் ஆண்டில் நடந்த க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதாவது மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ; அத்துடன்

4.11.2 ஆங்கில மொழியில் (C) சித்தி/ஆங்கில இலக்கியத்தில் (S) சித்தியுடன் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி மற்றும் கணிதம் உள்ளிட்ட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

4.12 ***பாடநெறி இல. 12* - விசேட கல்வி**

4.12.1 2006 ஆம் ஆண்டில் நடந்த க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ; அத்துடன்

4.12.2 க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

4.13 ***பாடநெறி இல. 13* - விவசாயம்**

4.13.1 2006 ஆம் ஆண்டில் நடந்த க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் விவசாயம் உட்பட மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

4.13.2 க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதத்துடன் விஞ்ஞானப் பாடத்தில் திறமைச் சித்தி உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கவனிக்க வேண்டியது**.- 2009 ஆம் வருடத்திற்காக தேசிய கல்விக் கல்லூரிகளில் விவசாயப் பாடநெறிக்காக க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் உயிரியல், இரசாயனவியல் மற்றும் விவசாயம் ஆகிய பாடங்கள் 3 இல் சித்தியடைந்த மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்குவதுடன் அத்தகைமைகள் உள்ள மாணவர்கள் போதியளவு இல்லாதவிடத்து க.பொ.த. (உ.த.) பரீட்சையில் விவசாயப் பாடத்துடன் கலைப்பாடங்கள் இரண்டில் சித்தியடைந்த மாணவர்களும், உயிரியல் விடயங்களுடன் 3 பாடங்கள் சித்தியடைந்த மாணவர்கள் கவனத்திற் கொள்ளப்படுவர்.

4.14 ***பாடநெறி இல. 14* - தொழில்நுட்பக் கற்கை :**

4.14.1 2006 ஆம் ஆண்டில் நடந்த க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும் ; அத்துடன்

4.14.2 க.பொ.த. (சா.த.) சித்தி

4.14.2.1 *நிர்மாணத் தொழில்நுட்பம் :*

க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் கணிதம், சிங்களம் /தமிழ் மொழியுடன் மரவேலை/மேசன் வேலை, கட்டிடம் கட்டுதல், உலோக வேலை/மோட்டார் தொழில்நுட்பம், பொறியியல், இயந்திரத் தொழினுட்பம், றேடியோ மெக்கானிசம், மின்சார இலத்திரனியல் தொழில்நுட்பம் ஆகிய விடயங்களில் ஒன்றுடன் ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

4.14.2.2 *கலையும் கைப்பணியும் :*

க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழி நெசவு/ மட்பாண்டத் தொழில் அல்லது கலையும் கைப்பணியும் என்பவற்றுள் ஒரு பாடத்துடன் ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன்

4.14.3 அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி/ தேசிய கைத்தொழில் அதிகார சபை/ தொழிற் பயிற்சி அதிகார சபை/ நெசவுக் கைத்தொழில் திணைக்களம்/ சிறு கைத்தொழில் திணைக்களம் ஆகிய நிறுவனங்களினால் நடாத்தப்படும் (அடைவு மட்டத்தை முறையாக உறுதிப்படுத்தி சான்றிதழ்களை வழங்கும்) 10 மாதங்களுக்கு குறையாத தொழில்நுட்ப கற்கை நெறியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**கவனிக்க வேண்டியவை :-**

(i) தெரிவு ஒழுங்கு முறை -

(அ) 4.14.1-4.14.2-4.14.3 சான்றிதழ் உள்ள விண்ணப்பதாரிகள் ;

(ஆ) 4.14.1 மற்றும் 4.14.3 சான்றிதழ் உள்ள விண்ணப்பதாரிகள் ;

(இ) 4.14.1, 4.14.2 சான்றிதழ் உள்ள விண்ணப்பதாரிகள்.

மேற்கூறப்பட்ட (அ) வில் குறிப்பிடப்பட்ட தகைமைகளை பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் போதியளவு இல்லாதவிடத்து 2005, 2004 ஆம் வருடங்களில் உயர்தரம் சித்தியடைந்து மேற்கூறப்பட்ட தகைமைகளை உடைய விண்ணப்பங்கள் கவனத்திற்கொள்ளப்பட்டதன் பின்பு (ஆ), (இ) களில் குறிப்பிடப்பட்ட தகைமையுள்ள விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கவனத்திற்கொள்ளப்படும்.

(ii) விண்ணப்பத்தில் நிர்மாணத் தொழினுட்பம்/கலையும் கைப்பணியும் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(iii) விண்ணப்ப முடிவுத் திகதிக்கு அல்லது முன்னதாக சகல தகைமைகளும் பெற்றிருத்தல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்தில் மேலே 1 இல் குறிப்பிடப்பட்ட (அ), (ஆ) மற்றும் (இ) ஆகியவற்றில் முன்னுரிமை அடிப்படையில் இல. 17.0 இல் தொழில்நுட்பக் கற்கைக்குரிய கூட்டில் "கலைப்பாடத்தின் பெயர்" ஐ உரிய கூட்டில் எழுதுக.

4.15 ***பாடநெறி இல. 15 - சித்திரம்:***

4.15.1 2006 ஆம் ஆண்டில் நடந்த க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்திரப் பாடம் உட்பட மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன்

க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்மொழி, கணிதம், சித்திரம் உட்பட ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும் ;

4.15.2 2006 ஆம் ஆண்டில் நடந்த க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் சித்திரம்/சித்திரமும் சிற்பமும் தொடர்பாக பெற்ற தரங்களுக்கமைய மேலதிகப் புள்ளிகள் வழங்கப்படும்.

***கவனிக்க வேண்டியது.-*** (i) 4.15.1 இன்கீழ் தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை போதியளவு இல்லாதவிடத்து 2005 ஆம் வருடம் நடாத்தப்பட்ட க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

(ii) சிங்களம் /தமிழ்மொழி, கணிதப் பாடம் சித்தியுடன் சித்திரப் பாடத்தில் திறமைச்சித்தியும் உட்பட ஆறு பாடங்களில் க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

4.16 ***பாடநெறி இல. 16 - நடனம் (கீழைத்தேயம்)/நடனம் (பரதம்) :***

4.16.1 2006 ஆம் ஆண்டில் நடந்த க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் கீழைத்தேய நடனம்/பரதநாட்டியப் பாடம் உட்பட மூன்று பாடங்களில் (ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரிக்கு இரண்டு பாடங்களில்) சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன்

4.16.2 2006 ஆம் ஆண்டில் நடந்த க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் நடனம் (கீழைத்தேயம்)/ நடனம் (பரத நாட்டியம்) ஆகிய பாடங்களில் பெற்றுள்ள தரங்களின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

4.16.3 க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், கீழைத்தேய நடனம் அல்லது பரத நாட்டியம் உட்பட ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**கவனிக்க வேண்டியவை.-** (i) ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் போதியளவு இல்லாதவிடத்து 2006 ஆம் வருடத்தில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் இரண்டு பாடங்களுடன் க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் பரத நாட்டியத்தில் திறமைச் சித்தி பெற்றவர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற்கொள்ளப்படும்.

4.17 ***பாடநெறி இல. 17 - சங்கீதம் (கீழைத்தேயம்), சங்கீதம் (கர்நாடகம்) :***

4.17.1 2006 ஆம் ஆண்டில் நடந்த க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் கீழைத்தேய சங்கீதம் / கர்நாடக சங்கீதம் உட்பட மூன்று பாடங்களில் (ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரிக்கு இரண்டு பாடங்களில்) சித்திபெற்றிருத்தல் வேண்டும்; அத்துடன்

4.17.2 2006 ஆம் ஆண்டில் நடந்த க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் சங்கீதம் (கீழைத்தேய/கர்நாடக) பாடத்தில் பெற்றுள்ள தரங்களின் அடிப்படையில் மேலதிக புள்ளிகள் வழங்கப்படும்.

4.17.3 க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழி, கணிதம், கீழைத்தேய சங்கீதம் அல்லது கர்நாடக சங்கீதம் உட்பட ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**கவனிக்க வேண்டியது.-** (i) ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரிகள் போதியளவு இல்லாதவிடத்து 2006 ஆம் வருடத்தில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் இரண்டு பாடங்களுடன் க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் கர்நாடக சங்கீதத்திற்கு திறமைச் சித்தி பெற்றோரின் விண்ணப்பங்கள் கவனத்திற்கொள்ளப்படும்.

4.18 ***பாடநெறி இல. 18 - மேலைத்தேய சங்கீதம் :***

4.18.1 2006 ஆம் ஆண்டில் நடந்த க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் மேலைத்தேய சங்கீதம் உட்பட மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன்

ஆங்கில மொழியில் திறமைச் சித்தியுடன்/ஆங்கில இலக்கியத்தில் திறமைச் சித்தியுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்மொழி, கணிதம், மேலைத்தேய சங்கீதத்தில் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்; அல்லது

4.18.2 2006 ஆம் ஆண்டில் நடந்த க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதாவது மூன்று பாடங்களில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும் ; அத்துடன் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி/ஆங்கில இலக்கியத்தில் சாதாரண சித்தியுடன்

சிங்களம்/தமிழ்மொழி, கணிதம் உட்பட க.பொ.த. (சா.த.) பரீட்சையில் மேலைத்தேய சங்கீதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல், கல்வியியற் கல்லூரி சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மேலைத்தேய சங்கீதம் தொடர்பாக வகுப்பு 5 இல் சித்தியடைந்திருத்தல் (எழுத்து மூலமும் செயல் முறையிலும்)

அல்லது

க.பொ.த. (உ.த.) பரீட்சையில் மேலைத்தேய சங்கீதப் பாடத்தை மேலதிக பாடமாக சித்தியடைந்திருத்தல்.

**கவனிக்க வேண்டியது.-**

(i) மேலைத்தேய சங்கீதம் தொடர்பாக நடைபெறும் செயல்முறைப் பரீட்சையின்போது உரிய தரத்தை அடைதல் வேண்டும்.

(ii) தெரிவின்போது 4.18.1 இல் தகுதி பெறுவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)

4.19 ***பாடநெறி இல. 19* - நாடகமும் அரங்கியலும் :**

4.19.1 2006 ஆம் ஆண்டில் நடந்த க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் உட்பட மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ; அத்துடன்

4.19.2 க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி, சங்கீதம் அல்லது நடனம் அல்லது சித்திரம், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

4.19.3 2006 ஆம் ஆண்டில் நடந்த க. பொ. த. (உ. த.) பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் பெற்ற தரத்தின் அடிப்படையில் மேலதிகப் புள்ளிகள் வழங்கப்படும்.

4.20 ***பாடநெறி இல. 20* - தகவல் தொழில்நுட்பம் :**

4.20.1 2006 ஆம் ஆண்டில் நடந்த க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதாவது மூன்று பாடங்களில் (ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரிக்கு 2 பாடங்கள்) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ; அத்துடன்

4.20.2 ஆங்கிலப் பாடத்தில் (C) சித்தி/ ஆங்கில இலக்கியத்தில் (S) சித்தியுடன், க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியும் கணிதத்தில் திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

4.21 ***பாடநெறி இல.* *21* சமூக விஞ்ஞானம் (சிங்களம்)**

***21* சமூக விஞ்ஞானம் (தமிழ்)**

***21* சமூக விஞ்ஞானம் (ஆங்கிலம்)**

4.21.1 2006 ஆம் ஆண்டில் நடந்த க.பொ.த. (உ.த.) பரீட்சையில் வரலாறு, அரசியல் விஞ்ஞானம், பொருளியல் மற்றும் புவியியல் ஆகிய பாடங்களில் ஒன்றுடன் ஒரே தடவையில் 3 பாடங்களில் (ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரிக்கு 2 பாடங்கள்) சித்தி பெற்றிருத்தல் அத்துடன்

(2009 ஆம் வருடத்திற்காக தேசிய கல்வியியல் கல்லூரிகளின் அனுமதிக்காக வரலாறு, புவியியல், அரசியல் ஆகிய விடயங்களில் ஒன்றில் சித்தியுடன் 3 பாடங்களில் ஒரே தடவையில் சித்தி ; ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரிக்கு அந்தப் பாடங்களில் ஒன்றுடன் 2 விடயங்களில் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

4.21.2 சமூக விஞ்ஞானமும் வரலாறும் பாடத்தில் திறமைச் சித்தியுடன் சிங்களம்/தமிழ், கணிதம் உள்ளிட்ட 6 பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

4.22 ***பாடநெறி இல. 22* - முதல் மொழி (தமிழ்)**

4.22.1 2006 ஆம் ஆண்டில் நடந்த க.பொ.த. (உ.த.) பரீட்சையில் தமிழ் மொழியில் திறமைச் சித்தியுடன் 3 பாடங்களில் (ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரிக்கு 2 பாடங்கள்) ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல் ; அத்துடன்

4.22.2 தமிழ் மொழியில் திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட ஆறு பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

### 4.23 பாடநெறி இல. 23 - (i) இரண்டாம் மொழி (சிங்களம்)

4.23.1 இரண்டாம் மொழி (சிங்களம்) பாடநெறிக்கு விண்ணப்பிப்போர் 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் சிங்கள மொழியில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

4.23.2 க. பொ. த. (சா. த.) பரீட்சையில் தெரிவுப் பாடமாக (இரண்டாம் மொழி தமிழில் சித்தியுடன் விருப்பத்திற்குரிய தமிழில் சித்தி ; அத்துடன்

மேற்கூறப்பட்ட 4.23.2 தகைமைகளைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரிகளில் போதியளவு இல்லாதவிடத்து அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட இரண்டாம் மொழி உயர் பாடநெறியில் தமிழ் மொழியில் சித்தியடைந்திருத்தல் தகைமையாகக் கருதப்படும்.

4.23.3 க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்கள மொழி, கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

### 4.24 பாடநெறி இல. 24 - இரண்டாம் மொழி (தமிழ்)

4.24.1 இரண்டாம் மொழி (தமிழ்) பாடநெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் 2006 ஆம் ஆண்டில் நடந்த க.பொ.த. (உ.த.) பரீட்சையில் தமிழ் மொழியில் திறமைச் சித்தியுடன் 3 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்; மற்றும்

4.23.2 க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டாம் மொழி (சிங்களம்) பாடத்தில் சித்தியடைந்திருத்தல் ;
அல்லது விருப்பத்திற்குரிய சிங்கள பாடத்தில் சித்தியடைந்திருத்தல்.

மேற்கூறப்பட்ட 4.24.2 தகைமைகளைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் நடத்தப்படும் இரண்டாம் மொழி உயர் பாடநெறியில் சிங்களப் பாடத்தில் சித்தியடைந்திருத்தல் தகைமையாகக் கருதப்படும்.

4.24.3 தமிழ் மொழி, கணிதம் உள்ளிட்ட 6 பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

5. பாடநெறி இலக்கம், பாடநெறியின் பெயர், மொழி மூலத்திற்கு அமைய ஒவ்வொரு பாடநெறியும் நடைபெறும் தேசிய கல்வியியல் கல்லூரிகள் அதன் இலக்கத்துடன் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளன. (தயவு செய்து இப்பட்டியலை நன்கு வாசிக்கவும். நேர்முகப் பரீட்சையின்போது ஒவ்வொரு பாடநெறிக்கும் உரிய கணனிப் பட்டியலை தயாரிக்கும்போது தங்களது விண்ணப்பம் கணனிப்படுத்தப்படுவது பாடநெறி, இலக்கத்துக்கு அமையவே. சரியான தகவல்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் பரீட்சைத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தபின் எவ்வித மாற்றமும் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.) :-

நிரல் (i) - கற்கைநெறி இலக்கம்

நிரல் (ii) - கற்கைநெறியின் பெயர்

நிரல் (iii) - சிங்கள மொழிமூலம் நடாத்தப்படும் கற்கைநெறியுள்ள தேசிய கல்விக் கல்லூரிகள்

நிரல் (iv) - தமிழ்மொழிமூலம் நடாத்தப்படும் கற்கைநெறியுள்ள கல்விக் கல்லூரிகள்

நிரல் (v) - ஆங்கிலமொழிமூலம் நடாத்தப்படும் கற்கைநெறியுள்ள தேசிய கல்வியியல் கல்லூரிகள்

(தேசிய கல்வியியல் கல்லூரிகள், அதன் இலக்கத்துடன் அடைப்புக்குள் தரப்பட்டுள்ளன)

| பாட இல. | பாடநெறி | மொழிமூல அடிப்படையில் பாடநெறிகள் நடைபெறும் கல்வியியல் கல்லூரிகள், அவற்றின் இலக்கம் | | |
|---|---|---|---|---|
| | | சிங்கள மொழிமூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழிமூலம் |
| (i) | (ii) | (iii) | (iv) | (v) |
| (1) | ஆரம்பக்கல்வி | (7) சிறிபாத | (6) வவுனியா | |
| | | (11) புலஸ்திபுர | (7) சிறிபாத | |
| | | (13) ருவன்புர | (8) அட்டாளைச்சேனை | |
| | | (14) ருகுணு | (9) மட்டக்களப்பு | |
| | | (17) ஹாபிடிகம | (15) யாழ்ப்பாணம் | |
| | | | (16) தர்காநகர் | |
| (2) | விஞ்ஞானம் | (2) நில்வளா | (6) வவுனியா | (2) நில்வளா |
| | | (5) சியனை | (7) சிறிபாத | (5) சியனை |

| பாட இல. | பாடநெறி | மொழிமூல அடிப்படையில் பாடநெறிகள் நடைபெறும் கல்வியியல் கல்லூரிகள், அவற்றின் இலக்கம் | | |
|---|---|---|---|---|
| | | சிங்கள மொழிமூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழிமூலம் |
| (i) | (ii) | (iii) | (iv) | (v) |
| | | (7) சிறிபாத | (8) அட்டாளைச்சேனை | (15) யாழ்ப்பாணம் |
| | | | (9) மட்டக்களப்பு | |
| (3) | கணிதம் | (2) நில்வளா | (7) சிறிபாத | (2) நில்வளா |
| | | (5) சியனை | (8) அட்டாளைச்சேனை | (5) சியனை |
| | | (7) சிறிபாத | (9) மட்டக்களப்பு | (15) யாழ்ப்பாணம் |
| (4) | உடற்கல்வி | (1) ஊவா | (6) வவுனியா | (1) ஊவா |
| | | (2) நில்வளா | (8) அட்டாளைச்சேனை | (2) நில்வளா |
| (5) | மனைப் பொருளியலும் | (14) ருகுணு | (6) வவுனியா | |
| | உணவுத் தொழில்நுட்பம் | | (16) தர்காநகர் | |
| (6) | ஆங்கிலம் | | | (3) மகாவலி |
| | | | | (10) பஸ்துன்ரட்ட |
| | | | | (15) யாழ்ப்பாணம் |
| (7) | பௌத்தம் | (4) சாரிபுத்த | | |
| (8) | இந்துசமயம் | | (6) வவுனியா | |
| (9) | இஸ்லாம் | | (8) அட்டாளைச்சேனை | |
| (10) | கத்தோலிக்கம்/ | (12) வயம்ப | (6) வவுனியா | |
| | கிறிஸ்தவம் | | | |
| (11) | நூலகக் கல்வியும் | | | (3) மகாவலி |
| | தொடர்பாடலும் | | | (10) பஸ்துன்ரட்ட |
| | | | | (15) யாழ்ப்பாணம் |
| (12) | விசேட கல்வி | (17) ஹாப்பிட்டிகம | (8) அட்டாளைச்சேனை | |
| | | | (15) யாழ்ப்பாணம் | |
| (13) | விவசாயம் | (11) புலஸ்திபுர | (6) வவுனியா | |
| (14) | தொழில் நுட்பக் கல்வி | (5) சியனை | (9) மட்டக்களப்பு | |
| (15) | சித்திரம் | (12) வயம்ப | (8) அட்டாளைச்சேனை | |
| | | | (9) மட்டக்களப்பு | |
| | | | (15) யாழ்ப்பாணம் | |
| (16) | நடனம் | (12) வயம்ப | (7) சிறிபாத | |
| | (கீழைத்தேயம்) | | (9) மட்டக்களப்பு | |
| | நடனம் (பரதம்) | | (15) யாழ்ப்பாணம் | |
| (17) | சங்கீதம் | (12) வயம்ப | (7) சிறிபாத | |
| | (கீழைத்தேயம்) | | (9) மட்டக்களப்பு | |
| | சங்கீதம் (கர்நாடகம்) | | (15) யாழ்ப்பாணம் | |
| (18) | மேலைத்தேய சங்கீதம் | | | (3) மகாவலி |
| | | | (9) மட்டக்களப்பு | |
| (19) | நாடகமும் அரங்கியலும் | (12) வயம்ப | (15) யாழ்ப்பாணம் | |
| (20) | தகவல் தொழில்நுட்பம் | | | (1) ஊவா |
| | | | | (2) நில்வளா |
| | | | | (5) சியனை |
| | | | | (6) வவுனியா |
| | | | | (7) சிறிபாத |
| | | | | (9) மட்டக்களப்பு |
| | | | | (11) புலஸ்திபுர |
| | | | | (12) வயம்ப |
| | | | | (13) ருவான்புர |
| | | | | (14) ருகுணு |
| | | | | (16) தர்காநகர் |
| (21) | சமூக விஞ்ஞானம் | (13) ருவன்புர | (7) சிறிபாத | (13) ருவன்புர |
| | | | (9) மட்டக்களப்பு | |
| | | | (16) தர்காநகர் | |

| பாட இல. | பாடநெறி | மொழிமூல அடிப்படையில் பாடநெறிகள் நடைபெறும் கல்வியியல் கல்லூரிகள், அவற்றின் இலக்கம் | | |
|---|---|---|---|---|
| | | சிங்கள மொழிமூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழிமூலம் |
| (i) | (ii) | (iii) | (iv) | (v) |
| (22) | முதன்மொழி (தமிழ்) | | (7) சிறிபாத | |
| | | | (9) மட்டக்களப்பு | |
| | | | (16) தர்காநகர் | |
| (23) | இரண்டாம் மொழி | (14) ருகுணு | | |
| | (சிங்களம்) | | | |
| (24) | இரண்டாம் மொழி | | (14) ருகுணு | |
| | (தமிழ்) | | | |

**கவனிக்க வேண்டியது.-**

(i) அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரிக்கு முஸ்லிம் விண்ணப்பதாரிகள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

(ii) தமிழ்மொழி மூலம் பெண் விண்ணப்பதாரிகள் மட்டுமே தர்காநகர் தேசிய கல்விக் கல்லூரிக்கு விண்ணப்பிக்கலாம்.

(iii) பரத நாட்டியம், கர்நாடக சங்கீதம், முதன் மொழி தமிழ், தமிழ்மொழி மூலம் மாத்திரமும் கீழைத்தேய நடனம், கீழைத்தேய சங்கீதம் சிங்களமொழி மூலம் மாத்திரமும் மேலைத்தேய சங்கீதம், நூலக விஞ்ஞானம் மற்றும் தகவல் தொடர்பாடல் ஆகிய பாடநெறிகள் ஆங்கில மொழி மூலம் மாத்திரமும் நடைபெறும்.)

**6. 2008 ஆம் ஆண்டுக்கான ஆசிரிய மாணவர்களைத் தெரிவதற்கான திட்டம் :**

6.1 ***தெரிவு அடிப்படை:***

6.1.1 2011 ஆம் ஆண்டின் பாடசாலை அமைப்பிற்குத் தேவையான ஆசிரியர் எண்ணிக்கைக்கு ஏற்ப தெரிவுசெய்யப்படும் விண்ணப்பங்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

6.1.2 ஆட்சேர்ப்பு **'Z'** புள்ளிகளின் அடிப்படையில் நடைபெறும். ஆங்கிலம்/உடற்கல்வி பாடநெறிகளுக்கு தெரிவுசெய்கையில் தேர்வுப் பரீட்சை, விளையாட்டு திறமைகளின் அடிப்படையில் தெரிவு நடைபெறும். தேர்ச்சி/விளையாட்டு திறன் போன்றவற்றில் ஒரே புள்ளியில் அதிகமானவர்கள் காணப்படுமிடத்து ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு ஏற்படும் சந்தர்ப்பத்தில் **'Z'** புள்ளி பரிசீலிக்கப்படும். ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரி தவிர்ந்த ஏனைய சகல கல்லூரிகளுக்கும் சகல பயிற்சி நெறிகளுக்கும் தேசிய மட்டத்தில் 30% மும் கஷ்டப் பிரதேசத்தில் 70%மும் தெரிவுசெய்யப்படும்.

6.1.3 நூலகர் கல்வியும் தொடர்பாடல் தொழில்நுட்பமும், விஞ்ஞானம், கணிதம், மேல்நாட்டு சங்கீதம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், உடற்கல்வி மற்றும் சமூக விஞ்ஞானம் ஆகியவற்றை ஆங்கில மொழி மூலம் கற்க விரும்புவோர் க.பொ.த. (சா.த) இல் ஆங்கில மொழியில் (C) சித்தி/ஆங்கில இலக்கியத்தில் (S) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். ஆங்கிலப் பாடநெறியை பின்பற்ற விண்ணப்பிப்பவர்கள் ஆங்கிலத்தில் (B) சித்தி/ஆங்கில இலக்கியத்தில் (S) சித்தியுடன் ; சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம் உட்பட ஆறு பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

6.1.4 உடற்கல்வி, நடனம் (மேலைத்தேய) /நடனம் (பரத), சங்கீதம் (மேலைத்தேய) சங்கீதம் (கர்நாடக), சங்கீதம் (கீழைத்தேய) பயிற்சி நெறிகளுக்காக நடாத்தப்படும் செயன்முறைப் பரீட்சையில் உடல் தகுதியில் திருப்திகரமான அடைவு மட்டங்களைப் பெற வேண்டும்.

6.2 ***கஷ்டப் பிரதேச மாவட்ட அடிப்படை :***

6.2.1 கஷ்டப்பிரதேச மாவட்டங்களுக்கான அனுமதியின்போது கல்வி வசதிகள் பங்கிடப்பட்டுள்ள விகிதத்திற்கு ஏற்ப கஷ்டப்பிரதேசம் என இனங்காணப்பட்டுள்ள 17 மாவட்டங்களுக்குரிய விண்ணப்பதாரிகளிடமிருந்து தெரிவு செய்யப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் அவ்வவ் மொழியில் க.பொ.த. (உ. த.) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் விகிதாசார எண்ணிக்கைக்கு ஏற்ப சகல பாடநெறிகளுக்குமாக அவ்வவ் மாவட்டங்களில் அனுமதிக்கப்படும் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

6.2.2 ஒவ்வொரு கஷ்டப்பிரதேச மாவட்டத்துக்கும் போதியளவு விண்ணப்பதாரிகள் இல்லாத பட்சத்தில் வேறு கஷ்டப்பிரதேசங்களால் விண்ணப்பம் நிரப்பப்படும்.

6.2.3 ***கஷ்டப்பிரதேச மாவட்டங்களும் அவற்றின் இலக்கங்களும் :-***

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாத்தளை | - 04 | முல்லைத்தீவு | - 13 | அநுராதபுரம் | - 20 |
| நுவரெலியா | - 06 | வவுனியா | - 14 | பொலொநறுவை | - 21 |
| ஹம்பாந்தோட்டை | - 09 | திருகோணமலை | - 15 | பதுளை | - 22 |
| யாழ்ப்பாணம் | - 10 | மட்டக்களப்பு | - 16 | மொனறாகலை | - 23 |
| கிளிநொச்சி | - 11 | அம்பாறை | - 17 | இரத்தினபுரி | - 25 |
| மன்னார் | - 12 | புத்தளம் | - 18 | | |

6.2.4 ***மாவட்டத்தைத் தீர்மானித்தல் :***

6.2.4.1 பாடசாலை விண்ணப்பதாரி முதன்முதல் க.பொ.த. (உ. த.) பரீட்சைக்குத் தோற்றிய மாதத்திற்கு முன்னுள்ள 5 ஆண்டுகளில் கற்ற பாடசாலைகளில் அதிகளவு காலத்தை (இரண்டரை ஆண்டுகளுக்கு மேல்) கொண்டுள்ள பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் அவரின் மாவட்டமாகக் கொள்ளப்படும்.

6.2.4.2 தனிப்பட்ட பரீட்சார்த்தி ஒருவர் க.பொ.த.(உ. த.) பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் தனிப்பட்ட பரீட்சார்த்தியாக விண்ணப்பித்திருந்தால் அவர் முதன்முறை க.பொ.த. (உ. த.) பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை அமைந்துள்ள மாவட்டமே அவரது மாவட்டமாகக் கொள்ளப்படும்.

6.2.4.3 தனிப்பட்ட பரீட்சார்த்தி ஒருவர் க.பொ.த. (உ. த.) பரீட்சைக்கு பாடசாலை ஊடாகத் தோற்றாதவிடத்து அவரின் மாவட்டமாவது அவர் க.பொ.த.(உ. த.) பரீட்சை எடுத்த மாதத்திற்கு முன்னுள்ள மாதத்தின் கடைசி நாள்வரை ஐந்து ஆண்டுகளில் கற்ற பாடசாலைகளில் கூடுதலான காலம் (இரண்டரை ஆண்டுகளுக்கு மேல்) கற்ற பாடசாலை அமைந்த மாவட்டமே அவரின் மாவட்டமாகக் கொள்ளப்படும்.

6.2.4.4 யாராவது ஒரு பரீட்சார்த்தி பாடசாலையில் படிக்காதவிடத்து அவரது மாவட்டம் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் உள்ள வாக்காளர் பட்டியல் மூலமோ அல்லது கிராமசேவையாளர் மூலமோ அல்லது உதவி அரசாங்க அதிபரின் சத்தியக் கடதாசி மூலமோ உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

6.3 ***ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரிக்கான தெரிவு :***

6.3.1 75% ஆன வெற்றிடங்கள் இந்தியத் தமிழ் வம்சாவழி விண்ணப்பதாரர்களிலிருந்தும் 25% சிங்கள மொழி மூல விண்ணப்பதாரர்களிலிருந்தும் நிரப்பப்படும்.

6.3.2 75% ஆன வெற்றிடங்கள் தமிழ்மொழி மூலப் பாடநெறிக்கும் 25% மான வெற்றிடங்கள் சிங்கள மொழிமூலப் பாடநெறிக்கும் ஒதுக்கப்படும்.

6.3.3 ஆரம்பக்கல்வி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடநெறிகள் சிங்கள மொழி மூலமும் ஆரம்பக் கல்வி, கணிதம், விஞ்ஞானம் , கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம் முதன் மொழி (தமிழ்), சமூக விஞ்ஞானம் ஆகியவை தமிழ் மொழியிலும் தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் ஆங்கில மொழி மூலம் மாத்திரம் நடாத்தப்படும்.

6.3.4 ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரிக்கு விண்ணப்பிக்க வேண்டியோர் நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, மொனறாகலை, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, மாத்தறை, காலி, குருநாகல் ஆகிய மாவட்டங்களில் வதிவோரின் பிள்ளைகள் மாத்திரமே.

6.3.5 தெரிவின்போது மேற்குறிப்பிட்ட பத்து மாவட்டங்களின் பெருந்தோட்டங்களில் வதியும் பணியாட்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அரசாங்க மற்றும் பதிவு செய்யப்பட்ட தனியார் பெருந்தோட்டச் சங்கங்களில் கடமையாற்று பவர்களின் பிள்ளைகள் அவற்றை உறுதிப்படுத்துவதற்காக தோட்ட பொறுப்பாளரின் கடிதம், (ஊழியர் சேவையாற்றிய காலப்பகுதியுடன்) ஊழியர் சேமலாப நிதியை அறவிடும் பதிவிலக்கத்தை உறுதிப்படுத்தும் கடித மொன்றையும் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரியின் மாவட்டம் தீர்மானிப்பதன் அடிப்படை விளக்கப்படுவது 6.2.2 பகுதி ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரிக்கு விண்ணப்பதாரிகள் அனுமதிக்கும் போதும் கவனத்தில் கொள்ளப்படும்.

6.3.6. விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்படும்போது மேற்குறித்த 10 மாவட்டங்களில் குறைந்தது ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒருவரையாவது தெரிவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**கவனத்திற் கொள்ளவேண்டியவை.**- சிங்களமொழி மூலம் கற்ற இந்திய வம்சாவழி விண்ணப்பதாரிகள் இந்திய வம்சாவழியினர்களுக்கான ஒதுக்கீட்டு விகிதாசாரத்திற்கேற்பவும், தமிழ் மொழி மூலம் கற்ற சிங்கள விண்ணப்பதாரிகள் சிங்கள மொழி சதவீதத்திற்கேற்பவும் கவனத்தில் கொள்ளப்படும்.

7. **தெரிவு தொடர்பான ஏனைய விபரங்கள் :**

7.1 தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்தி குறிப்பிட்ட ஒரு பாடநெறிக்குத் தனக்குள்ள தகைமையை அத்தாட்சிப்படுத்துவதற்கு வேண்டிய ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணங்களின் மூலப்பிரதிகளை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிப்பதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். வெற்றிடங்களிலும் பார்க்க கூடுதலானோர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

7.2 நேர்முகப் பரீட்சையின்போது ஆவணங்களின் மூலப்பிரதியை காண்பிக்கத் தவறின் அவர் தெரிவு செய்யப்படமாட்டார்.

7.3 விண்ணப்பதாரி உடல், உளத் தகுதியில் நேர்முகப் பரீட்சைக்குழு எதிர்பார்க்கும் தகுதியை அடையாதபோது, சிறப்பான நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றின் முன் தோற்ற வகை செய்ய வேண்டும். இக்குழுவின் அறிக்கை கல்விக் கல்லூரிச் சபைக்கு சமர்ப்பிக்கப்படும். கல்விக் கல்லூரிச் சபை இறுதித் தீர்மானத்தை எடுக்கும்.

7.4 தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரி பதிவு செய்யப்படவேண்டிய தினத்திலிருந்து மூன்று தினங்களுக்குள் குறிப்பிட்ட தேசிய கல்விக் கல்லூரியில் தன்னைப் பதிவு செய்யத் தவறுமிடத்து தனது அனுமதி, உரிமையை இழப்பார். அதனால் ஏற்படும் வெற்றிடம் தகுதி ஒழுங்கின்படி நிரப்பப்படும். விண்ணப்பிக்கும் கல்விக் கல்லூரியில் வெற்றிடம் இல்லாதவிடத்து குறித்த பயிற்சி நெறி உள்ளதும் வெற்றிடமாகவும் உள்ள வேறு கல்விக்கல்லூரிக்கு அனுமதிக்கப்படுவார்கள்.

7.5 பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்ட பயிலுனர் ஒருவர் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு ஏற்றதான உடல், உளத்தகுதியை உடையவர் என்பதை நிரூபிப்பதற்காக மருத்துவப் பரீட்சை ஒன்றுக்குத் தம்மை உட்படுத்திக் கொள்ள வேண்டப்படுவர்.

7.6 ஒரு குறிப்பிட்ட விண்ணப்பதாரி தேசிய கல்விக் கல்லூரி/பாடநெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட பின்பு வேறு தேசிய கல்விக்கல்லூரிக்கு /பாடநெறிக்கு மாற்றம் பெற அனுமதிக்கப்படமாட்டார். குறிப்பிட்ட பாடநெறிக்குரிய எண்ணிக்கையினர் கிடைக்காதவிடத்து அவர்கள் அண்மையிலுள்ள வேறு கல்விக் கல்லூரிகளில் இப்பாடநெறியைத் தொடர அனுமதிக்கப்படுவர்.

7.7 ஒரு குறிப்பிட்ட பாடநெறிக்கு உரிய வெற்றிடங்களிலும் பார்க்கக் கூடுதலான எண்ணிக்கை விண்ணப்பதாரிகள் க.பொ.த. (உ. த.) பரீட்சையில் ஒரே அளவான "Z"புள்ளிகளைப் பெற்றிருப்பின் அப்பாடநெறிக்குத் தேவையான மாணவர்களைத் தெரிவுசெய்ய, அவர்கள் க.பொ.த. (சா.த) பரீட்சையில் முதல் அமர்வில் பெற்ற பெறுபேறு கவனத்தில் எடுக்கப்படும். "விசேட சித்தி - 3 புள்ளிகள், திறமைச்சித்தி - 2 புள்ளிகள், சாதாரண சித்தி - 1 புள்ளி" என்ற அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டு மொத்தப்புள்ளியை அடிப்படையாகக் கொண்டு உரிய வெற்றிடம் நிரப்பப்படும். மேற்படி புள்ளிகள் முக்கியமான க.பொ.த. (சா.த) பரீட்சையில் தோற்றிய எட்டு பாடங்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

8. **இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்களும் பாடநெறிக்கு உள்வாங்க முடியாதோர்களும்:-**

8.1 அரசாங்க அல்லது தனியார் பாடசாலையொன்றில் ஏற்கனவே ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ளவர்கள்.

8.2 அரசாங்கப் பாடசாலை ஆசிரிய நியமனத்துக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளவர்கள்.

8.3 தேசிய கல்விக் கல்லூரியொன்றில் தற்போது ஒரு பயிற்சி நெறியைப் பின்பற்றுபவர்களும் முன்பு பின்பற்றியவர்களும்.

8.4 ஒரு பல்கலைக்கழக/வேறு ஏதாவது உயர் கல்விசார் நிறுவனத்தில் க. பொ. த. உயர் தரத்தை அடிப்படைத் தகுதியாகக் கொண்ட ஒன்று அல்லது பல பாடநெறிகளைப் பயிலுபவர்களும் பயிலுவதற்காகப் பதிவு செய்யப்பட்டவர்களும் ஏதாவது ஒரு பட்டப்படிப்பை முடித்தவர்களும், (விண்ணப்ப இறுதித் திகதியின் பின்பு நேர்முகப் பரீட்சைக்காக பல்கலைக்கழகங்களில் பதிவை இரத்துச் செய்து வருபவர்கள் தெரிவுக்கான தகைமைகள் அற்றவர்கள் என்பதைக் கருத்திற் கொள்ளவும்.)

8.5 ஒழுக்காற்றுக் காரணங்களுக்காக கல்விக் கல்லூரி ஒன்றிலிருந்து நீக்கப்பட்டவர்கள்.

9. **பயிற்சியும் அது தொடர்பான விதிகளும் :**

9.1 ஒரு பயிற்சி நெறிக்குரிய காலம் மூன்று வருடங்களாகும். இது தேசிய கல்விக் கல்லூரியினுள் இரண்டு வருட நிறுவனம்சார் வதிவிடப் பயிற்சியையும், ஒரு வருடம் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட பாடசாலையில் உள்ளகப் பயிற்சியையும் உள்ளடக்கியது. இரண்டாம் வருட வெளிவாரிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு கல்விக் கல்லூரியில் 90% ஆன நாட்கள் பாடங்களில் கலந்துகொள்ள வேண்டும்.

9.2 சகல பயிலுனரும், பயிற்சியின்போது 1ஆம் வருட முடிவிலும் 2ஆம் வருட இறுதியிலும் நடத்தப்படும் ஆண்டிறுதி உள்வாரிப் பரீட்சையிலும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் வெளிவாரிப் பரீட்சையிலும் சித்தி அடைய வேண்டும். ஆங்கிலப் பாடநெறிக்குரியவர்கள் தவிர்ந்த சகல பயிலுனர்க்கும் ஆங்கிலப் பரீட்சையில் சித்தியடைவது கட்டாயமாகும். இந்த கோரிக்கைக்கு உடன்படுவோரே விண்ணப்பிக்க வேண்டப்படுகின்றனர்.

9.3 ஒரு பயிலுனருக்கு இரண்டு வருட வதிவிடப் பயிற்சிக் காலத்தில் மாதமொன்றுக்கு ரூபா 2,000 உணவு, உறைவிட வசதிகளுக்காக வழங்கப்படும். ஒருவருடத்தில் 10 மாதங்களுக்கு மட்டுமே கொடுக்கப்படும். ஒரு வருட உள்ளகப் பயிற்சிக் காலத்தில் மாதமொன்றுக்கு ரூபா 2,500 வீதம் கொடுப்பனவு 10 மாதங்களுக்கு வழங்கப்படும். பயிற்சியாளர்களின் சொந்தத் தேவைகளுடன் தொடர்பான ஏனைய சகல செலவுகளும் பயிற்சியாளர்களினாலேயே ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

9.4 ஒரு பயிலுனரை தன் பயிற்சிக் காலத்துள் ஒரு பல்கலைக்கழகம் அல்லது வேறு ஏதாவது உயர் கல்வி நிறுவனங்களில், க.பொ.த. (உ. த.) அனுமதிக்குரிய தகுதியாக உடைய எந்தவொரு கல்விசார் பாடநெறியையும் உள்ளக மாணவனாகப் பின்பற்ற அனுமதிக்கப்படமாட்டார். அவ்வாறு பயிற்சி பெறுவது நிரூபிக்கப்பட்டால் ஆசிரிய மாணவருக்காக செலவிடப்பட்ட செலவை மீண்டும் அறவிட்ட பின்பு பயிற்சி நெறியிலிருந்து விலக்கப்படுவார்.

9.5 ஆசிரிய பயிலுநர் ஒருவர், திருமணம் செய்து கொண்டால் அவரின் பதிவு இரத்துச் செய்யப்படும். அனுமதியின் பின்னர் பிக்கு ஒருவர் தனது துறவு நிலையை இழக்கும் பட்சத்தில் அவரின் பதிவும் இரத்தாகும். சகல மதகுருமாரும் பயிற்சியை முடித்துக் கொண்டு துறவு நிலையை இழக்காமல் கல்வி அமைச்சுக்கு குறைந்தது 5 வருடங்கள் சேவை செய்வதாக கல்வி அமைச்சுடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும்.

9.6 பயிற்சிக் காலத்தில் ஒரு பயிற்சியாளரது நடத்தை, ஊக்கம், கல்விச் செயற்பாடுகளில் முன்னேற்றம் என்பன எதிர்பார்க்கப்படுகின்ற தரத்துக்குக் குறைவாகக் காணப்படின் அவர் பயிற்சி நெறியிலிருந்து எந்நேரத்திலும் நீக்கிவைக்கப்படுவார். அவ்வாறே கல்விச் செயற்பாடுகளில் முதலாம் வருட மதிப்பீட்டில் திருப்தியான அடைவு மட்டத்தை எட்டவில்லை அல்லது 9.4 பகுதியில் உள்ள பயிற்சிநெறியொன்றை பின்பற்றுபவர் என்று நிரூபிக்கப்பட்டால் பயிற்சிநெறியிலிருந்து நீக்கப்படுவர். இவ்விடயத்தில் கல்வி அமைச்சின் கல்விக் கல்லூரிகளுக்கான சபையின் முடிவே இறுதி முடிவாகும்.

9.7 இரண்டு வருட வதிவிடப் பயிற்சியின்போது பீடாதிபதியாலும், இறுதிவருட உள்ளகப் பயிற்சியின்போது அதிபராலும், ஏதாவது முறைப்பாடுகள் உடல், உளக் குறைபாடுகள் முன்வைக்கப்படும்போது, அம்முறைப்பாடுகள் சிறப்புக் குழுவொன்றின் முன் வைக்கப்படும். சிறப்புக் குழுவின் அறிக்கை, கல்விக் கல்லூரிச் சபைக்கு முன்வைக்கப்படும். சபையே இறுதி முடிவெடுக்கும்.

9.8 பயிலுனர் பயிற்சி நெறியை நிறைவுசெய்ய வேண்டிய மூன்று வருடத்திற்குள் அதிலிருந்து விலகியிருப்பின், அவர்களைப் பயிற்றுவிப்பதற்காகக் கல்வி அமைச்சினால் செலவு செய்யப்பட்ட தொகையைக் கொடுப்பதாக கல்வி அமைச்சுடன் உடன்படிக்கை ஒன்று செய்து கொள்ளல் வேண்டும்.

9.9 பயிற்சியைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்யும் பயிற்சியாளர்களுக்குக் கற்பித்தலிலான தேசிய டிப்ளோமாச் சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சிக் காலத்தில் பயிற்சிநெறி வேலைகளும், ஆளுமை விருத்தியும் (கட்டாய இணைப்பாடவிதான நடவடிக்கைகள் உட்பட) தொடர் மதிப்பீடு செய்யப்படுவதுடன், இந்த மதிப்பீடு தேசிய போதனா டிப்ளோமாச் சான்றிதழ் வழங்குவதற்கான இறுதிப் பரீட்சையின் ஒரு பகுதியாகவும் அமையும்.

9.10 இந்தப் பயிற்சிநெறியைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்தவர்கள் இந்த வர்த்தமானியில் 6.2.3 இன்கீழ் காட்டப்பட்டுள்ள கஷ்டப் பிரதேசங்களில் ஏற்படும் வெற்றிடங்களை அடிப்படையாகக் கொண்டு நியமனங்களை வழங்குவதற்காக கருத்திற் கொள்ளப்படும்.

9.10.1 கணிதம், விஞ்ஞானம், உடற்கல்வி, சமூக விஞ்ஞானம் போன்ற பாடநெறிகளை ஆங்கில மொழி மூலம் பயிலும் மாணவர்கள் நியமனம் பெறும் பாடசாலையில் ஆங்கில மொழிமூல வெற்றிடங்கள் இல்லாதுவிடின் தமது தாய்மொழியில் (சிங்களம்/ தமிழ் மொழிமூலம்) கற்பித்தல் வேண்டும்.

9.10.2 வருங்காலத்தில் அரசாங்கப் பாடசாலைகளில் நியமனம் வழங்குகையில் இந்தப் பயிற்சியைத் திருப்திகரமாக முடித்தவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும். அதனால் பாடநெறியை தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுபவர்கள் மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டால் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும். நூலகக் கல்வியும், தகவல் தொடர்பாடல் கற்கையும், பயிற்சி நெறியைப் பூரணப்படுத்தியவர்கள் ஆசிரிய நூலகராக அரசாங்கப் பாடசாலைகளில் நியமனப் பெற தகைமை பெறுவர். இரண்டாம் மொழி (சிங்களம்) பாடநெறியை பூர்த்திசெய்தவர்கள் தமிழ்மொழி மூலப் பாடசாலைகளிலும், இரண்டாம் மொழி (தமிழ்) பாடநெறியை பூர்த்திசெய்தவர்கள் சிங்கள மொழி மூலப் பாடசாலைகளிலும் கடமையாற்ற வேண்டும்.

9.10.3 மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கமைய ஆசிரியர்களாக நியமிக்கப்படுபவர்கள் நியமிக்கப்பட்ட அன்றிலிருந்து கஷ்ட கல்வி வலயப் பிரதேசப் பாடசாலைகளில் ஐந்து வருட காலத்திற்குக் கல்வி அமைச்சில் சேவை புரிவதற்காக கல்வி அமைச்சுடன் உடன்படிக்கை முறியொன்றைச் செய்துகொள்ள வேண்டும். நியமனம் பெறும் மாவட்டம் எக்காரணம் கொண்டும் மாற்றப்பட மாட்டாது.

9.11 பயிற்சியை வெற்றிகரமாக முடிக்கும் பயிற்சியாளர்கள் அரசாங்க சேவையில் ஆசிரிய நியமனத்தை ஏற்க விரும்பாவிட்டால் தமது பயிற்சிக்கான மொத்தச் செலவையும் கல்வி அமைச்சிற்குத் திருப்பிச் செலுத்துதல் வேண்டும். இதற்கமைய பயிலுனர் ஒரு ஒப்பந்தத்திற்கு உட்பட வேண்டும்.

9.12 தேவையான கல்வி மற்றும் ஏனைய தகைமைகளும் விண்ணப்பம் அனுப்பவேண்டிய இறுதித் திகதிக்கு முன்பு பூரணப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

10. **விண்ணப்பித்தல் :**

10.1 ஒரு விண்ணப்பதாரி மூன்று பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம். ஒரே பாடநெறிக்கு இரு மொழி மூலம் விண்ணப்பித்தால் அது இரண்டு பாடநெறிகளாகவே கருதப்படும். அவ்வாறானவர்களுக்கு மேலும் ஒரு பாடநெறிக்கே விண்ணப்பிக்க முடியும். உ-ம் : விஞ்ஞான பாடநெறிக்கு சிங்கள மொழிமூலமும், ஆங்கிலமொழி மூலமும் விண்ணப்பித்தவர்களுக்கு இன்னும் ஒரு பாடநெறிக்கே விண்ணப்பிக்க முடியும்.

10.2 ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பமும் அதன் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளும் மாத்திரமே ஒரே கடித உறையில் சமர்ப்பிக்க வேண்டும். ஒன்றிற்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பப்படின் சகல விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

10.3 விண்ணப்பம் கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கும் அறிவுறுத்தல்களுக்கும் அமைய தயாரிக்கப்பட வேண்டும்.

10.4 விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் "பிரதம ஆணையாளர், (ஆசிரியர் கல்வி) கல்வியியல் கல்லூரிகள் கிளை, கல்வி அமைச்சு, 'இசுருபாய', பத்தரமுல்லை" என்ற விலாசத்திற்கு 2007, யூலை 20 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் தாங்கிவரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் -

**"தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கான அனுமதி விண்ணப்பம் - 2008"**

**"முதற் தெரிவாகவுள்ள பயிற்சி நெறியின் பெயர் :------------- இலக்கம் ------ "** என தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

(தயவு செய்து விண்ணப்பங்களை பரீட்சைத் திணைக்களத்திற்கோ, தேசிய கல்விக் கல்லூரிகளுக்கோ அனுப்ப வேண்டாம்.)

10.5 விண்ணப்பம் தொடர்பான முறைப்பாடுகளைச் செய்யும்போது விண்ணப்பத்தின் நிழற்பிரதியையும், விண்ணப்பம் பதிவு செய்து பதிவுத்தபால் பற்றுச்சீட்டையும் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.

10.6 பரீட்சையின் சுட்டிலக்கம், வருடம், பாடநெறி இலக்கம் ஆகியவற்றை உள்ளடக்காத குறைபாடுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10.7 விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

10.8 விண்ணப்பத்துடன் வேறு எந்தவிதமான ஆவணங்களும் இணைக்கக்கூடாது.

10.9 ஒரு விண்ணப்பதாரியினால் கொடுக்கப்பட்ட சான்றிதழ் ஏதாவது பொய்யானதாகவோ, போலியானதாகவோ காணப்பட்டால் அதன்பேறாக அவ்விண்ணப்பதாரி சேவையிலிருந்து நீக்கப்படுவதுடன் அரசாங்க சேவையில் வேறு நியமனங்களைப் பெறுவதற்கான உரிமையையும் இழப்பார்.

11. இவ்வர்த்தமானப் பத்திரிகை சம்பந்தமான இறுதித் தீர்மானம் கல்விக் கல்லூரிகள் சபையினால் மேற்கொள்ளப்படும்.

12. இந்த வர்த்தமானப் பத்திரிகையில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான பாடநெறிகளுக்கிடையில் ஏற்படும் தெளிவின்மைகளுக்கு சிங்கள மொழி மூலத்திலிருந்தே முடிவெடுக்கப்படும்.

ஆரியரத்ன ஹேவகே,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்லை.
2007, யூன் 13.

**விண்ணப்பங்கள் தயாரிப்பதற்கான அறிவுறுத்தல்கள்**

வர்த்தமானி அறிக்கையை மிகவும் கவனமாக வாசிக்கவும். வேண்டிய தகைமைகளைப் பெற்றிருக்கும் பாடநெறிகள் மூன்றுக்கு மட்டும் விண்ணப்பிக்கவும். ஒரு விண்ணப்பம் மட்டும் அனுப்பவும். இந்த விண்ணப்பத்தையும், அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் இரண்டையும் மாத்திரம் ஒரே உறையில் அனுப்பவும். (பாடசாலை விண்ணப்பதாரிகள் அதிபர்கள் மூலமும், தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் சமாதான நீதவான்கள் மூலமும் பிரதிகளை அத்தாட்சிப்படுத்த வேண்டும்.)

2. கீழ்க்குறிப்பிடப்பட்ட மாதிரிக்கமைய வெள்ளை நிற ஏ4 (21 செ. மீ. x 29.7 செ. மீ.) அளவுத் தாளில் விண்ணப்பத்தைத் தயாரிக்கவும். 1.0-10.3 வரையான பகுதிகள் முதலாம் பக்கத்தில் அமையும் வகையில் தயாரிக்கவும். தகவல் கூட்டினுள் கொடுக்கப்பட வேண்டிய இடங்களில் பொருத்தமான கூட்டில் 'X' அடையாளம் இடுக.

3. ஒவ்வொரு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கும் கணணிப்படிவம் 1.0 - 10.3 வரையுள்ள தகவல்களின் அடிப்படையிலேயே என்பதை தயவு செய்து கவனத்தில் கொள்ளவும். விசேடமாக பாடநெறி இலக்கமும், க. பொ. த. (உயர் தரப்) பரீட்சைச் சுட்டெண், 'Z' பெறுமானம் சரியாயிருப்பதை உறுதி செய்து கொள்ளவும். ஒன்றின் மேல் ஒன்றாக இலக்கங்களை எழுதுவது, தெளிவின்றி எழுதுவது, பிழையாக எழுதுவது விண்ணப்பம் நிராகரிக்கப்பட காரணமாகும் என்பதைக் கவனிக்க.

4. அத்துடன் உடற்கல்விக்கு விண்ணப்பிக்கும்போது 13.0 ஆவது கூட்டையும் அவ்வாறு பௌத்த தர்மத்துக்கு 14.0 ஆவதும் இந்துசமயம்/இஸ்லாம் சமயத்திற்கு 16.0 ஆவது கூட்டையும் திருப்தியாக நிரப்ப வேண்டும். அவ்வாறே கத்தோலிக்கம்/கிறிஸ்தவம் 15.0 ஆவது கூட்டையும் தொழில்நுட்ப பாடநெறியினர் 17.0 ஆவது கூட்டையும் மேலைத்தேய சங்கீதம் ஆகியவற்றுக்கு 18.0 ஆவது கூட்டையும் பிழையின்றி ஒரேமுறையில் நிரப்ப வேண்டும். அவை பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

5. தேசிய கல்விக் கல்லூரிகள் ஒவ்வொன்றிற்கும் பாடநெறிகள் ஒவ்வொன்றிற்கும் கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டு இலக்கங்களுக்கு அறிவித்தலின் பந்தி 05 ஐப் பார்க்கவும்.

6. மாவட்டங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டு இலக்கங்கள் பின்வருமாறு :-

| | | |
|---|---|---|
| கொழும்பு | - | 01 |
| கம்பஹா | - | 02 |
| களுத்துறை | - | 03 |
| மாத்தளை | - | 04 |
| கண்டி | - | 05 |
| நுவரெலியா | - | 06 |
| காலி | - | 07 |
| மாத்தறை | - | 08 |
| அம்பாந்தோட்டை | - | 09 |
| யாழ்ப்பாணம் | - | 10 |
| கிளிநொச்சி | - | 11 |
| மன்னார் | - | 12 |
| முல்லைத்தீவு | - | 13 |
| வவுனியா | - | 14 |
| திருகோணமலை | - | 15 |
| மட்டக்களப்பு | - | 16 |
| அம்பாறை | - | 17 |
| புத்தளம் | - | 18 |
| குருநாகல் | - | 19 |
| அநுராதபுரம் | - | 20 |
| பொலநறுவை | - | 21 |
| பதுளை | | 22 |
| மொனறாகலை | - | 23 |
| கேகாலை | - | 24 |
| இரத்தினபுரி | - | 25 |

**7. மொழிமூலம் குறியீடு :-**

| | | |
|---|---|---|
| தமிழ் | - | T |
| சிங்களம் | - | S |
| ஆங்கிலம் | - | E |

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**தேசிய கல்வியியல் கல்லூரிக்கான அனுமதி - 2008**

(விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப்படிவத்துடன் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இரு பிரதிகள் மட்டுமே அனுப்ப வேண்டும். இம்மாதிரி விண்ணப்பப்படிவம் போன்றமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதற் பக்கத்தில் 10 வரையுள்ள விடயங்களை உள்ளடக்கவும். அனுமதிக்காக வேண்டி நடைபெறும் நேர்முகப் பரீட்சையின் கணனிப் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்படுவது பந்தி 1.0 முதல் 10.3 வரையுள்ள தகவல்களின் அடிப்படையிலேயே.)

1.0

| விருப்பத் தெரிவு | பாடநெறி இல. | தேசிய கல்விக் | மொழிமூலம் கல்லூரியின் இல. |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

2.0 2.1 பெயர் முதலெழுத்துக்களுடன் (ஆங்கில எழுத்துக்களில்) (In Block Letters) (உ-ம் : Mr. PERERA R. C.) Rev. Mr./ Miss :-----.

2.2 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :-----.

3.0 நிரந்தர வதிவிட (முகவரி) :-

3.1 ஆங்கிலத்தில் (In Block Letters) :-----.

3.2 (சிங்களம்/ தமிழில்) :-----.

3.3 தபாற் குறியீடு :-----.

4.0 நிரந்தர வதிவிட நிர்வாக மாவட்டம் :-----.

மாவட்ட இலக்கம் :-----. [ ]

5.0 வர்த்தமானி விளம்பரத்தில் பிரிவு 6.2 பகுதி உரியதாக இருந்தால் மட்டும் 6.2.4 இன்படி மாவட்டம் : -----.

மாவட்ட இலக்கம் : [ ]

6.0 6.1 பிறந்த திகதி : ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

6.2 தேசிய அடையாள அட்டை இலக்கம் : [ | | | | | | | | | ]

7.0 ஆணா/பெண்ணா ? (1) ஆண்: [1] (2) பெண் : [2]

8.0 இனம் :-

| சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இந்தியத் தமிழர் | முஸ்லிம் | ஏனையோர் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |

9.0 2006 க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் பெற்ற பெறுபேறு :-

9.1 வருடம் : [ | | | ]

9.2 சுட்டெண் : [ | | | | | | ]

9.3 பெற்ற 'Z' புள்ளிகள் : [ ] [ | | | ]

9.4 பெறுபேற்றின் விபரங்கள் :

| | பாடம் | பெற்ற தரம் |
|---|---|---|
| 1. | ..................................... | ..................................... |
| 2. | ..................................... | ..................................... |
| 3. | ..................................... | ..................................... |

10.10.1 ஆங்கிலப் பாடநெறிக்கும் ஆங்கில மொழிமூல நெறிகளுக்கும் விண்ணப்பிக்கும் பரீட்சார்த்தி க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் ஆங்கிலம் அல்லது ஆங்கில இலக்கியத்தில் பெற்ற அதி உயர் சித்தி :

வருடம் : [ | | | ] பரீட்சைச் சுட்டெண் : [ | | | | | | | | | ]

10.10.2 ஸ்ரீபாத தேசியக் கல்விக் கல்லூரிக்கு விண்ணப்பிப்பவர் தான் ஒரு தோட்டத் தொழிலாளியின் பிள்ளையா என்பதை உரிய கூட்டினுள் 'X' அடையாளம் இட்டுக் காட்டுக.

ஆம் [1] இல்லை [2]

10.3 உடற்கல்வி பாடநெறி சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி மூலம் விண்ணப்பிப்பவர்கள் மாத்திரம் 4.4.3 மற்றும் 4.4.4 இற்கு அமைய தமது விண்ணப்பத்தில் 13.0 பிரிவிற்காக உள்ளடக்கிய புள்ளிகளின் மொத்தம் : ☐

11.0 2006 ஆம் வருடத்திற்கு முன் தாங்கள் க. பொ. த. (உயர் தரப்) பரீட்சைக்குத் தோற்றியிருந்தால். தாங்கள் தோற்றியது ஒரு பாடத்திற்கேயாயினும் சரி ஒவ்வொரு முறையினதும் பூரணமான விபரத்தை குறிப்பிடவும்:-

| | | |
|---|---|---|
| 11.1 பரீட்சைக்குத் தோற்றிய தடவை/அமர்வு | 1 ஆவது | 2 ஆவது |
| 11.2 வருடம் : | .......................... | ........................ |
| 11.3 பரீட்சை சுட்டெண் : | .......................... | ........................ |
| 11.4 பரீட்சை நிலைய இலக்கம் : | .......................... | ........................ |
| 11.5 Z புள்ளி | .......................... | ........................ |

11.6 சித்தியடைந்த பாடமும் தரமும்:

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| ...................................... | ................ | ...................................... | ................ |
| ...................................... | ................ | ...................................... | ................ |
| ...................................... | ................ | ...................................... | ................ |
| ...................................... | ................ | ...................................... | ................ |

12.0 க. பொ. த. (சா.த.) பரீட்சை விபரங்கள் :

| | | | |
|---|---|---|---|
| 12.1 பரீட்சைக்கு தோற்றிய அமர்வு- | 1 ஆவது | 2 ஆவது | 3 ஆவது |
| 12.2 வருடம் : | .......................... | ........................ | ....................... |
| 12.3 சுட்டிலக்கம் : | .......................... | ........................ | ....................... |
| 12.4 பரீட்சை நிலைய இலக்கம் : | ......................... | ........................ | ....................... |

12.5 பெறுபேற்றின் விபரங்கள் :

| | 1 ஆம் அமர்வு | | 2 ஆம் அமர்வு | | 3 ஆம் அமர்வு | |
|---|---|---|---|---|---|---|
| | பாடம் | தரம் | பாடம் | தரம் | பாடம் | தரம் |
| 1. | ................. | ................. | ................. | ................. | ................. | ................. |
| 2. | ................. | ................. | ................. | ................. | ................. | ................. |
| 3. | ................. | ................. | ................. | ................. | ................. | ................. |
| 4. | ................. | ................. | ................. | ................. | ................. | ................. |
| 5. | ................. | ................. | ................. | ................. | ................. | ................. |
| 6. | ................. | ................. | ................. | ................. | ................. | ................. |
| 7. | ................. | ................. | ................. | ................. | ................. | ................. |
| 8. | ................. | ................. | ................. | ................. | ................. | ................. |

13.0 வர்த்தமானி அறிவித்தலில் 4.4 பிரிவின் பந்தி 4.4.3, 4.4.4 இன்படி விளையாட்டுத் தேர்ச்சி நிலை பற்றிய விபரங்கள் (உடற்கல்வி விண்ணப்பதாரிகளால் மட்டும் நிரப்பப்பட வேண்டும்) (இப்பிரிவை பூரணப்படுத்தும் போது 4.4.3 இற்கு தங்களது முழுக் கவனத்தையும் செலுத்தவும். தாங்கள் பெற்றுள்ள அதிஉயர் விளையாட்டுச் சான்றிதழ்கள் மூன்றின் விபரத்தை மட்டும் குறிப்பிட்டால் போதுமானதாகும்) நீங்கள் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்திற்குத் தோற்றி சித்தியடைந்திருப்பின் 4.4.4 இற்கு அமைய தரத்திற்குரிய புள்ளிகளையும் கீழ்வரும் பகுதியிலும் குறிப்பிடல் வேண்டும். மொத்தப் புள்ளிகள் முதலாம் பக்கத்தில் 10.3 பிரிவிலும் உள்ளடக்க வேண்டும் :-

விளையாட்டுத் தேர்ச்சிகள்

| தொடர் இல. | வருடம் | வழங்கிய அமைச்சு/ நிறுவனம்/ கழகம் | போட்டி மட்டம் : சர்வதேச/ தேசிய/ மாகாண/ மாவட்ட/வலயம் | விளையாட்டு/ பிரிவு | பெற்ற இடம் | 4.4.3 இற்கு உரிய புள்ளி |
|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |
| க.பொ.த. (சா. த.) பரீட்சையில் சுகாதாரமும் உடற் கல்வியும் (தோற்றியிருப்பின்) தரம் : புள்ளி : | | | | மொத்தப் புள்ளி : | | |

14.0 வர்த்தமானி அறிவித்தலின் 4.7 (அ) இன்படி பிராசீன ஆரம்ப/பௌத்த தர்மாசார்ய/பிரிவெனா இறுதிப்பரீட்சைப் பெறுபேறுகள் இருப்பின் (பிக்கு விண்ணப்பதாரிகளாலும் நிரப்பப்படுதல் வேண்டும்.) :-

| பரீட்சை | பிராசீன ஆரம்பம் | பௌத்த தர்மாசார்ய | பிரிவெனா இறுதிப் பரீட்சை | சமயப் பாடசாலை இறுதிப் பரீட்சை |
|---|---|---|---|---|
| 14.1 வருடம் : | | | | |
| 14.2 சுட்டெண் : | | | | |
| 14.3 பரீட்சை நிலைய இலக்கம் : | | | | |
| 14.4 பாடங்களும் தரமும் : | 1.<br>2.<br>3.<br>4. | 1.<br>2.<br>3.<br>4.<br>5.<br>6. | 1.<br>2.<br>3.<br>4.<br>5.<br>6.<br>7.<br>8.<br>9.<br>10.<br>11. | |

15.0 வர்த்தமானி அறிவித்தலின் 4.10 இன்படி கத்தோலிக்க/கிறிஸ்தவப் பாடநெறிக்குரிய விண்ணப்பதாரிகளினால் பின்வரும் அட்டவணை பூரணப்படுத்தப்பட வேண்டும் :

| பாடநெறியின் /தராதரப் பத்திரத்தின் பெயர் | கால அளவு | | தரம் |
|---|---|---|---|
| | தொடக்கம் | வரை | |
| 15.1 இறையியல் (BTH) பாடநெறி<br>15.2 தேசிய கத்தோலிக்க மத்திய நிலையம் நடத்தும் கிறிஸ்தவ மெய்யியல் பற்றிய சான்றிதழ்<br>15.3 தேசிய மறைக்கல்வி மத்திய நிலையத்தினால் வழங்கப்பட்ட கத்தோலிக்க மறை ஆசிரியர் சான்றிதழ்<br>15.4 தேசிய மறைக்கல்வி மன்றம் நடாத்தும் கத்தோலிக்க திருமறை பற்றி டிப்ளோமா பாடநெறி | | | |

| பாடநெறியின் / தராதரப் பத்திரத்தின் பெயர் | கால அளவு | | தரம் |
|---|---|---|---|
| | தொடக்கம் | வரை | |
| 15.5 துறவற சபையினருக்கான மறைக்கல்வி மற்றும் பயிற்சிப் பாடநெறி (NOVITIATE) நிறைவு செய் திருப்பின் துறவற சபையின் தலைவர்/அதற்குப் பொறுப்பான ஆயர் வழங்கிய சான்றிதழ் | | | |
| 15.6 தேசிய கிறிஸ்தவ சபையினால் நடாத்தப்படும் மறைக்கல்வி (அறிவு) பற்றி தேசிய சான்றிதழ் | | | |
| 15.7 பிலிமத்தலாவை இலங்கை இறையியல் கல்லூரி நடாத்தும் இறையியலாளர் டிப்ளோமாச் சான்றிதழ் | | | |
| 15.8 கத்தோலிக்க கிறிஸ்தவ ஆசிரியர்களாக தகைமை உள்ளவர் என்று கத்தோலிக்கர்களுக்கு ஆயரும் கிறிஸ்தவர்களுக்கு தேசிய கிறிஸ்தவ சபையும் வழங்கிய சான்றிதழ் | | | |
| 15.9 க. பொ. த. உயர்தரத்தில் கிறிஸ்தவ பாடத்தில் சித்தி | | | |

16.0 வர்த்தமானியில் கொடுக்கப்பட்டுள்ள 4.8 மற்றும் 4.9 க்கு இணங்க இந்து சமயம், இஸ்லாம் ஆகிய பாடநெறிக்கான விண்ணப்பதாரிகள் பொருத்தமான வகையில் இக்கூட்டை நிரப்புக :

| பாடநெறியின் பெயர் | கால அளவு | சான்றிதழ் செயற்படும் திகதி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

17.0 ஒரு தகுதி வாய்ந்த அரசாங்க கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் தொழில்நுட்பக் கல்வி பாடநெறியைத் திருப்திகரமாகப் பூர்த்திசெய்து கல்விக் கல்லூரிகளில் தொழில்நுட்பப் பாடநெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரியினால் வர்த்தமானி அறிவித்தலின் 4.14 பகுதிக்கு அமைவாக நிரப்பப்பட வேண்டியது :

| தொழில்நுட்ப பாடநெறியின் பெயர் | பதிவுசெய்த திகதியும் பதிவு இலக்கமும் | கல்வி நிலையம் | பாடநெறியின் கால எல்லை | பாடநெறி திருப்திகர மாக பூர்த்திசெய்யப் பட்டுள்ளதா ? |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

18.0 வர்த்தமானி அறிவித்தலின் 4.18.1, 4.18.2 இற்கு அமைய மேலைத்தேய சங்கீதம் பாடநெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் உரிய தகவல்களை உள்ளடக்குதல் வேண்டும்.

| வருடம் | பரீட்சை நிபுணத்துவச் சான்றிதழ் வெளியிட்ட நிறுவனம் | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

19.0 **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(i) என்னால் ஒரு விண்ணப்பம் மாத்திரம் அனுப்பப்பட்டுள்ளது எனவும் ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பினால் எனது எல்லா விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும் என்பதை நான் அறிவேன். விண்ணப்பிக்கும் கல்விக் கல்லூரியில் வெற்றிடம் இல்லாதவிடத்து குறித்த பாடநெறி நடைபெறும் வெற்றிடமாகவுள்ள கல்விக் கல்லூரிக்கு அனுமதி பெற விருப்பம் தெரிவிக்கின்றேன்.

(ii) இந்த விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் நான் இத்தால் உறுதிமொழிகின்றேன். மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் ஏதாவது பிழையாகவோ பொய்யானதாகவோ காணப்படுமிடத்து அது எனது தெரிவுக்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு நீக்கம் செய்யப்படவும் தெரிவுக்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் பாடநெறியிலிருந்து விலக்கப்படுவேன் என்பதையும் நன்கு அறிவேன்.

(iii) நான் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கவில்லை என்பதையும், பல்கலைக்கழக அனுமதி பெறவில்லை எனவும், பல்கலைக்கழகமொன்றில் ; பல்கலைக்கழக / நிறுவனமொன்றில் / இணைந்த பல்கலைக்கழக கல்லூரிகளில் பதிவு செய்யப்படவில்லை என்பதையும் / பாடநெறியொன்றை பின்பற்றவில்லை என்பதையும் இத்தால் உறுதி செய்கிறேன்.

..................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :.......................

**20.0 பாடசாலை / பிரிவெனா விண்ணப்பதாரிகள் தொடர்பாக பாடசாலை / பிரிவெனா தலைவரின் சான்றுரை :**

மேற்குறிப்பிட்ட விண்ணப்பதாரி இப்பாடசாலையில் க. பொ. த. (சா.த.) மற்றும் க. பொ. த. (உ. த.) பரீட்சை/ஆரம்பப் பிரிவெனாப் பரீட்சை ஆகியவற்றுக்கு மாணவனாகத் தோற்றினார் என்றும், நான் அறிந்தவரையில் மேலே விண்ணப்பதாரியால் கொடுக்கப்பட்ட தகவல்கள் சரியானவை என்றும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ பெறுபேற்று அறிக்கைப்படி ............... ஆண்டு க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் விண்ணப்பதாரி பெற்ற 'Z' புள்ளிகள் ..................................... (சொற்களில்) ஆகும் என்றும் சான்றுரைக்கின்றேன்.

.............................,

பாடசாலை அதிபர்/பிரிவெனாத் தலைவரின் கையொப்பம்.

இலச்சினை முத்திரை:------.

பாடசாலை அதிபர்/பிரிவெனாத் தலைவர் பெயர் :------.

பாடசாலை /பிரிவெனாவின் பெயரும் விலாசமும் :------.

திகதி :------.

21.0 **தனிப்பட்ட விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் எனக்கு அனுப்பப்பட்ட பரீட்சைப் பெறுபேற்று அறிக்கையின்படி ............................ ஆம் ஆண்டு க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் என்னால் பெறப்பட்ட 'Z' புள்ளிகள் ..................................... (சொற்களில்) ஆகும் என்று நான் உறுதியுரைக்கிறேன்.

................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :------.

என் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது.

..........................

சமாதான நீதவானின் கையொப்பம்.

பெயரும் பதவி இலச்சினையும் :------.

திகதி :------.

6-609

## திருத்தம்

### வெளிவிவகார அலுவல்கள் அமைச்சு

இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களில் உள்ள வெற்றிடங்களுக்கான அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கான போட்டிப் பரீட்சை

2007.05.25 ஆந் திகதிய 1499 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட, இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களில் உள்ள வெற்றிடங்களுக்கான அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கான போட்டிப் பரீட்சை அறிவித்தலில் பின்வரும் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

**தகைமை.**- (அ) (i) இல் கூறப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கான ஆகக்கூடிய வயதெல்லை 56 ஆக திருத்தப்பட்டுள்ளது.

(ii) இல் கூறப்பட்டுள்ள இலங்கை தூதரகங்களில் சேவையாற்றி இலங்கைக்குத் திரும்பிய பின்னர் விண்ணப்பதாரிகள் இரண்டு வருடங்களைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என 2 ஆம் பந்தியின் (ii) உப பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனை நீக்கப்பட்டுள்ளது.

**விண்ணப்பிக்கும் முறை.**- 5.2 இல் குறிப்பிடப்பட்டிருந்த, விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதி 09.07.2007 ஆக திருத்தப்பட்டுள்ளது.

டீ. பீ. மடுவேகெதர,
பதில் செயலாளர்,
வெளிவிவகார அமைச்சு.

வெளிவிவகார அலுவல்கள் அமைச்சு,
குடியரசு கட்டிடம்,
கொழும்பு 01.
2007, யூன் 15.

6-15

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.